வடக்கின் முதல் நாளிதழ் - Estd 1959

Reg. No. : P. 1632

விலை ரூ. 30/=

# ஈழநாடு

Eelanadu ஈழநாடு

MARUTHI MONEY EXCHANGE
மாருதி
Money Exchange (Pvt) Ltd.
இல.390, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
T.P: 021 221 4433
076 284 4443
இல.285, காலி வீதி, வெள்ளவத்தை, கொழும்பு 06
T.P: 011 236 2086
இவ் அனைத்து சேவைகளையும் இங்கு பெற்றுக் கொள்ளலாம்.
MoneyGram. money transfer மணிகிராம் பணப்பரிமாற்றம்
Ria MONEY TRANSFER றியா பணப்பரிமாற்றம்
WESTERN UNION MONEY TRANSFER வெஸ்ரேன் யூனியன் பணப்பரிவர்த்தனை

Email : eelanaduweekly@gmail.com மலர் : 06 02.06.2025 திங்கட்கிழமை இதழ் : 153 பக்கங்கள் : 12

# உள்ளூராட்சி சபைகளின் பதவி காலம் இன்று தொடக்கம் ஆரம்பமாகின்றது!

## பெரும்பான்மை இல்லாத சபைகள் ஆட்சியமைக்க ஒரு வாரம் அவகாசம்

கொழும்பு, ஜூன் 02

**உள்ளூராட்சி சபைகளின் அதிகாரபூர்மான பதவிக் காலம் இன்று திங்கட்கிழமை முதல் ஆரம்பமாகிறது. இந்த நிலையில், 161 உள்ளூராட்சி சபைகளின் தலைவர்களின் விவரங்கள் நேற்றைய தினம் தேர்தல்கள் ஆணைக்குழுவால் வர்த்தமானியில் வெளியிடப்பட்டன.**

யாழ்ப்பாணம் மாநகர சபை உட்பட 170இற்கும் மேற்பட்ட உள்ளூராட்சி சபைகளின் விவரங்கள் வெளியிடப்படவில்லை. இவ்வாறு வர்த்தமானியில் பெயரிடப்படாத பெரும்பாலான உள்ளூராட்சி சபைகளில் எந்தக் கட்சியும் அறுதிப் பெரும்பான்மை பெறவில்லை.

எனவே, இந்த சபைகளில் ஆட்சி அமைப்பது தொடர்பில் உள்ளூராட்சி மன்றங்களின் ஆணையாளர்கள் தலைமையில் சபைகள் கூடி தீர்மானிக்க முடியும். இவ்வாறு கூடும் சபைகள் தங்கள் தலைவர்களை தெரிவுசெய்வதற்கு ஒரு வார கால அவகாசம் தேர்தல்கள் ஆணைக்குழுவால் வழங்கப்பட்டுள்ளது.

கடந்த மே 6ஆம் திகதி 339 உள்ளூராட்சி சபைகளுக்கு தேர்தல் நடைபெற்றது. தேர்தல் முடிவுகளின்படி தெரிவு செய்யப்பட்ட, மற்றும் பட்டியல் மூலம் தேர்ந்தெடுத்து கட்சிகளால் அனுப்பப்பட்ட உறுப்பினர்களின் பெயர்கள் அடங்கிய வர்த்தமானி நேற்று முன்தினம் தேர்தல்கள் ஆணைக்குழுவால் வெளியிடப்பட்டது என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

## யாழ். மாநகர சபை: முதன்முறையாக முஸ்லிம் பெண் பிரதிநிதி தெரிவு!

யாழ்ப்பாணம், ஜூன் 02

யாழ்ப்பாணம் மாநகர சபைக்கு முதன்முறையாக முஸ்லிம் பெண் உறுப்பினர் ஒருவர் தெரிவாகியுள்ளார்.



இலங்கை தமிழ் அரசுக் கட்சி பாத்திமா றிஸ்லா என்பவரை போனஸ் ஆசனம் மூலம் நியமித்திருக்கிறது. இதன்மூலம், அவர் யாழ். மாநகர சபை உறுப்பினராகியுள்ளார்.

கடந்த உள்ளூராட்சி மன்றங்கள் தேர்தலில் யாழ். மாநகர சபையில் இலங்கை தமிழ் அரசுக் கட்சியின் பட்டியல் வேட்பாளராக பாத்திமா றிஸ்லா போட்டியிட்டிருந்தார். அந்தக் கட்சிக்கு கிடைத்த 3 போனஸ் ஆசனங்களில் ஒன்று பாத்திமா றிஸ்லாவுக்கு 11

## வடக்கு, கிழக்கு உள்ளூராட்சி சபைகளின் தவிசாளர் விவரம்

கொழும்பு, ஜூன் 02

ஏதாவது ஒரு கட்சி அறுதிப் பெரும்பான்மை பெற்ற உள்ளூராட்சி சபைகளின் தலைவர்கள், உப தலைவர்களின் விவரங்களை தேர்தல்கள் ஆணைக்குழு வெளியிட்டுள்ளது.

இதில், வடக்கு, கிழக்கு மாகாணங்களில் உள்ளூராட்சி சபைகளின் தலைவர்களின் விவரம் வருமாறு,

கிளிநொச்சி மாவட்டத்தில் கரைச்சி பிரதேச சபையின் தவிசாளராக அ. வேழமாலிகிதன், உபதவிசாளராக பு. சிவகுமார், பூநகரி பிரதேச சபையின் தவிசாளராக சி. சிறீரஞ்சன், உபதவிசாளராக கு. குணலக்ஷ்மி ஆகியோர் பெயரிடப்பட்டுள்ளனர்.

முல்லைத்தீவு மாவட்டத்தில் புதுக்குடியிருப்பு 11

## தாமரை இலை பறிக்க சென்ற இருவர் மரணம்!

முல்லைத்தீவில் சோகம்

- ச.தவசீலன் -

முல்லைத்தீவு, மே 02

ஆலயத்தின் தேவைக்காக தாமரை இலைகளை பறிக்கச் சென்ற 10 வயது சிறுவன் உட்பட இருவர் குளத்தில் மூழ்கி உயிரிழந்தனர்.

முல்லைத்தீவு - உடுப்புக்குளத்தில் நேற்று ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 11.30 மணியளவில் இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது. இதில், அளம்பில் வடக்கை சேர்ந்த 10 வயதுடைய சிவநேசன் பிரணவன், 25 வயதுடைய 11

## ஒளிப்படம் பிடித்த மாணவிகள் கேணியில் தவறிவீழ்ந்து பலி!

முல்லைத்தீவில் மற்றொரு சோகம்

- ச.தவசீலன் -

முல்லைத்தீவு, ஜூன் 02




கைபேசியில் படம் எடுத்துக் கொண்டிருந்த சிறுமிகள் இருவர் ஆலய கேணியில் தவறி விழுந்து நீரில் மூழ்கி உயிரிழந்தனர்.

இந்தச் சம்பவம் நேற்று ஞாயிற்றுக்கிழமை மதியம் முல் லைத்தீவு - குமுழமுனை கொட்டுக்கிணற்று பிள்ளையார் ஆலயத்தில் இடம்பெற்றுள்ளது. இந்த 11

## ஐ. நா. மனித உரிமை ஆணையாளர் மாத இறுதியில் இலங்கை வருவார்?

கொழும்பு, ஜூன் 02



சர்வதேசம் முன்வைத்துள்ள மனித உரிமைகள் கரிசனைகள் விடயத்தில் இலங்கை தடுமாறி வரும் நிலையில், ஐ. நா. மனித உரிமைகள் ஆணையாளர் வோல்கர் டர்க் இலங்கைக்கு வருகை தரவுள்ளார்.

அவரின் வருகை இந்த மாத இறுதியில் அல்லது ஜூலையில் நிகழும் என்று வெளிவிவகார அமைச்சு வட்டாரங்கள் உறுதி செய்துள்ளன. எனினும், அவர் இலங்கை வரும் திகதி இன்னமும் இறுதி செய்யப்படவில்லை என்று 11

உயிர்த்த ஞாயிறு தாக்குதல்:

## விசாரணைகளில் தாமதம் வருத்தமளிக்கிறது

### கத்தோலிக்க திருச்சபை

கொழும்பு, ஜூன் 02

"உயிர்த்த ஞாயிறு குண்டுத் தாக்குதல்களுக்கு பொறுப்பானவர்களை சட்டத்தின் முன் நிறுத்துவதில் ஏற்பட்ட தாமதம் குறித்துத் திருச்சபை மகிழ்ச்சியடையவில்லை" என்று, தேசிய கத்தோலிக்க திருச்சபை தகவல் தொடர்பு பணிப்பாளர் அருட்தந்தை ஜூட் கிருஷாந்த தெரிவித்துள்ளார்.

உயிர்த்த ஞாயிறு குண்டுத் தாக்குதல்கள் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட விசாரணைகள் குறித்து ஊடகங்களிடம் நேற்று தெரிவித்தபோதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

மேலும், "நாங்கள் அரசாங்கத்தை விமர்சிக்க விரும்பவில்லை, ஆனால் உயிர்த்த ஞாயிறு குண்டு தாக்குதல்களுக்குப் பொறுப்பானவர்களைக் கொண்டு 11

## ஓமந்தை கார் விபத்தில் காயமடைந்தவர் மரணம்!

யாழ்ப்பாணம், மே 02

வவுனியா - ஓமந்தை விபத்தில் உயிரிழந்த இந்திய துணைத் தூதரக அதிகாரியின் புதல்வரும் நேற்றிரவு சிகிச்சை பலனின்றி உயிரிழந்தார்.

கடந்த திங்கட்கிழமை இடம்பெற்ற இந்த விபத்தில் காயமடைந்த பிரபாகர சர்மா அக்ஷய் யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையின் தீவிர சிகிச்சைப் பிரிவில் சிகிச்சை பெற்றுவந்தார். இந்த நிலையிலேயே, நேற்று ஞாயிற்றுக்கிழமை இரவு அவர் சிகிச்சை பலனின்றி உயிரிழந்தார். 11


காசாவில் மனித பேரவலம்!

## உதவிபெற காத்திருந்தோர் மீது தாக்குதல்; 32 பேர் பலி!

காசா, ஜூன் 02


உலருணவு விநியோகித்த இடத்தில் கூடிய பொதுமக்கள்மீது இஸ்ரேல் படைகள் நடத்தியதாகக் கூறப்படும் தாக்குதலில் குறைந்தது 32 பேர் உயிரிழந்தனர். 200இற்கும் மேற்பட்டவர்கள் காயமடைந்தனர் என்று அங்கிருந்து கிடைக்கும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

தெற்கு காசாவின் ரஃபா நகரில் மனிதாபிமான உதவி வழங்கும் மையத்திலேயே நேற்று அதிகாலை இந்தத் தாக்குதல் நடத்தப்பட்டது. காயமடைந்தவர்கள் நாசர் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளனர் என்று காசா சுகாதார பிரிவு 11



**உண்மைகள் புனிதமானவை; கருத்துக்கள் சுதந்திரமானவை**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



அருள்மிகு கமலாம்பிகா சமேத கைலாசநாதசுவாமி(நல்லூர் சிவன்) ஆலய அம்மன் பெருந்திருவிழா நேற்று கொடியேற்றத்துடன் ஆரம்பமானபோது... (படங்கள் : ஐ. சிவசாந்தன்)

# யாழ். பொது நூலகம் எரியூட்டலின் 44ஆவது ஆண்டு நினைவேந்தல்!

*யாழ்ப்பாணம், ஜூன் 02*

யாழ்ப்பாணம் பொதுசன நூலகம் தீயூட்டி எரிக்கப்பட்டதன் 44ஆவது ஆண்டு நினைவேந்தல் நேற்று ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றது.

யாழ். பொதுசன நூலகத்தில் நடைபெற்ற இந்த நினைவேந்தலின்போது நூலகத்தை உருவாக்குவதற்கு காரணகர்த்தாவாக விளங்கிய செல்லப்பா, யாழ்ப்பாண பொதுசன நூலகம் எரியூட்டப்பட்டதை அறிந்து உயிரிழந்த தாவீது அடிகளாருக்கும் அஞ்சலி செலுத்தப்பட்டது.




1981 மே 31 அன்று தமிழர் விடுதலை கூட்டணியின் தேர்தல் பிரசாரக் கூட்டம் நாச்சிமார் கோவிலடியில் நடைபெற்றபோது அடையாளம் தெரியாத நபர்கள் துப்பாக்கிச் சூடு நடத்தினர். இதைத் தொடர்ந்து அங்கு வன்முறை வெடித்தது. அன்றிரவு யாழ்ப்பாணத்தின் பிரபல வணிக நிறுவனங்கள், கடைகள் என அனைத்தும் தீயிட்டு கொளுத்தப்பட்டன. நள்ளிரவும் கடந்து தொடர்ந்த வன்முறையில் ஜூன் முதலாம் திகதி இரவு யாழ்ப்பாண பொதுசன நூலகமும் திட்டமிட்டு எரியூட்டப்பட்டது.

இருபதாம் நூற்றாண்டின் இன, பண்பாட்டு அழிப்புகளில் மிகப்பெரும் வன்முறையாகக் கருதப்படும் யாழ்ப்பாண நூலக எரிப்பின் 44ஆம் ஆண்டு நினைவேந்தல் நேற்றைய தினம் அனுஷ்டிக்கப்பட்டது என்பது குறிப்பிடத்தக்கது.

(ஐ)

# அச்சுறுத்தலுக்குள் ஊடகத்துறை அநுர அரசாங்கமும் பாராமுகம்!

## வடமராட்சி ஊடக இல்லம்

*வடமராட்சி, ஜூன் 02*

ஆயுதங்கள் மௌனிக்கப்பட்டு 16 ஆண்டுகள் கடந்த நிலையிலும் ஊடகத்துறை மீதான அச்சுறுத்தல் தொடர்ந்து வருகின்றமைக்கு படுகொலை செய்யப்பட்ட ஊடகவியலாளர்களுக்கு நீதி வழங்கும் விடயத்தில் ஆட்சிகள் மாறினாலும் பாராமுகமாக செயல்பாட்டு வருகின்றமையே காரணம் என்று வடமராட்சி ஊடக இல்லம் தெரிவித்துள்ளது.

படுகொலை செய்யப்பட்ட ஊடகவியலாளர் ஐ. நடேசனின் 21ஆம் ஆண்டு நினைவேந்தல் நேற்றுமுன்தினம் வடமராட்சி ஊடக இல்லத்தில் நடைபெற்றது. இதன்போதே ஊடக இல்லத்தின் செயலாளர் மயூரன் மேற்கண்டவாறு கூறினார்.

வடமராட்சியை சேர்ந்த நடேசன் மட்டக்களப்பில் வாழ்ந்த நிலையில் மக்களுக்காக துணிச்சலுடன் செயல்பட்டவர். நேரடி அச்சுறுத்தல்களுக்கு மத்தியிலும் ஊடகப் பணி ஆற்றியவர். 2004ஆம் ஆண்டு அரச படைகளுடன் சேர்ந்தியங்கிய ஒட்டுக்குழுக்களால் அவர் சுட்டுக்கொல்லப்பட்டார். இவ்வாறு தமிழர் தாயகத்தில் 40இற்கும் மேற்பட்ட ஊடகவியலாளரகள் சுட்டு படுகொலை செய்யப்படடும் கடத்தப்பட்டு - காணாமல் ஆக்கப்பட்டும் உள்ளனர்.

ஆயுதங்கள் மௌனிக்கப்பட்டு 16 ஆண்டுகள் கடந்துள்ள போதிலும் ஊடகத்துறை மீதான அச்சுறுத்தல் பல்வேறு வடிவங்களில் தொடர்ந்தே வருகிறது. அன்று ஆயுத முனையில் மேற்கொள்ளப்பட்ட அச்சுறுத்தல் இன்று வன்முறை வடிவத்திலும் பயங்கரவாத தடைச் சட்டத்தின் பெயராலும் தாக்குதல்கள், விசாராணகள் என்ற வடிவங்களிலும் தொடர்ந்து வருகின்றன. அநுர குமார திஸநாயக்க அரசாங்கம் பொறுப்பேற்று ஆறு மாதங்கள் கடந்துள்ள போதிலும் இவ்விடயத்தில் எவ்வித நடவடிக்கைகளும் எடுக்காது பாராமுகமாக செயல்பட்டு வருகிறது - என்றார்.

(ஐ-02)

### யாழ். நகர வாகன பாதுகாப்பு நிலையத்தில்

# மாற்றுத்திறனாளியின் பணப்பையை அபகரித்து 34 ஆயிரம் ரூபாய் மோசடி!

*யாழ்ப்பாணம், ஜூன் 02*

யாழ். போதனா மருத்துவமனை அருகே வாகன பாதுகாப்பு நிலையம் ஒன்றில் சகோதரர்கள் இருவர் மாற்றுத்திறனாளி ஒருவரிடம் 34 ஆயிரம் ரூபாயை மோசடி செய்த சம்பவம் தொடர்பில் யாழ். பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

நேற்று முன்தினம் இரவு இடம்பெற்ற இந்த மோசடி சம்பவம் தொடர்பில் மேலும் அறிய வருவதாவது,

பளையை சேர்ந்த பாதிக்கப்பட்ட நபர் யாழ்ப்பாணம் நகர பகுதியில் தனது வேலை நிமித்தம் வந்துள்ளார். பேருந்தில் பயணிப்பதற்காக தனது சைக்கிளை குறித்த வாகன பாதுகாப்பு நிலையத்தில் நிறுத்திவிட்டு, அங்கிருந்து செல்ல முற்பட்டவரிடம் அங்கு வந்த ஒருவர் அவரை தனக்கு தெரியும் என்று கூறி கைபேசி இலக்கத்தை தருமாறு கேட்டுள்ளார்.

இருட்டில் நின்ற நபரிடம் தான் கைபேசி பாவிப்பதில்லை என்று பாதிக்கப்பட்டவர் கூறியுள்ளார். உடனே எதிரில் நின்றவர் அவரின் முகத்தில் குத்திவிட்டு பணப்பையை பறித்துக் கொண்டு அங்கிருந்து தப்பிச் சென்றுள்ளார்.

இதையடுத்து, பாதிக்கப்பட்டவர் வாகன பாதுகாப்பு நிலையத்தில் பணியிலிருந்தவரிடம் சம்பவத்தை கூறியுள்ளார்.

இவர் கூறியதைக் கேட்ட பணியிலிருந்த நபர், அவ்வாறு செய்தவர் தனது தம்பிதான் என்றும் நாளை வாருங்கள் உங்கள் பணப்பையை மீட்டுத் தருகிறேன் என்றும் கூறியுள்ளார். அத்துடன், பேருந்தில் செல்வதற்கு செலவாக 500 ரூபாய் பணத்தையும் கொடுத்துள்ளார். இரவு நேரமென்பதால் பாதிக்கப்பட்டவரும் வேறு வழியின்றி அந்தப் பணத்தை பெற்றுக் கொண்டு சென்றுள்ளார்.

மறுநாள் காலை குறித்த வாகன பாதுகாப்பு நிலையத்துக்கு சென்ற பாதிக்கப்பட்ட நபரிடம் தனது தம்பியிடம் வாங்கினார் என்று கூறி அவரின் பணப்பையை வாகன பாதுகாப்பு பணியிலிருந்தவர் கொடுத்துள்ளார்.

பணப் பையை வாங்கிய பாதிக்கப்பட்ட நபர், அந்த இடத்திலேயே சோதனையிட்டுள்ளார். பணப்பையிலிருந்த 8 ஆயிரம் ரூபாய் பணம் காணாமல் போயிருந்ததுடன், வங்கி அட்டை மூலம் 26 ஆயிரம் ரூபாய் எடுக்கப்பட்டமையும் தெரிய வந்தது.

இது தொடர்பில், பணப்பையை வழங்கியவரிடம் பாதிக்கப்பட்டவர் கேட்டபோது, அவருக்கு ஆயிரம் ரூபாய் பணத்தைக் கொடுத்து, "எனது தம்பியை பிடிக்கமுடியாது. நீ இதைக் கொண்டு போ...", என்று கூறியுள்ளார். இதையடுத்து, பாதிக்கப்பட்டவர் யாழ்ப்பாணம் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளார்.

குறித்த வாகன பாதுகாப்பு நிலையத்தில் பணியாற்றிய நபர் திட்டமிட்டு இவ்வாறான வழிப்பறிகளில் ஈடுபட்டமை தெரிய வந்துள்ளது. இது போன்ற சம்பவங்கள் அடிக்கடி நடக்கின்றன என்றும் பொலிஸார் கூறினர் எனவும் பாதிக்கப்பட்டவர் தெரிவித்துள்ளார்.

(ஐ)

# கஞ்சாவுடன் ஒருவர் கைது!

*யாழ்ப்பாணம், ஜூன் 02*

கஞ்சா போதைப்பொருளுடன் ஒருவரை கைது செய்துள்ளதாக சுன்னாகம் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

புன்னாலைக்கட்டுவன் பகுதியில் வைத்து 38 வயதான நபரையே தாம் கைது செய்துள்ளனர் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

சுன்னாகம் பொலிஸ் விசேட அதிரடி படையினரால் கிடைத்த தகவலின் அடிப் படையிலேயே சந்தேகநபர் கைது செய்யப்பட்டார்.

(ஐ)

# யாழ்ப்பாணத்தின் சில சபைகளில் எங்கள் கட்சியின் ஆட்சி அமையும்

## அமைச்சர் சந்திரசேகர்



*யாழ்ப்பாணம், ஜூன் 02*

"யாழ். மாவட்டத்தில் சில சபைகளில் தேசிய மக்கள் சக்தி ஆட்சி அமைக்கும். மேலும் சில சபைகளில் எதிர்க்கட்சி தலைவராகக்கூட சிறப்பாக செயல்பட முடியும்", இவ்வாறு கடற்றொழில், நீரியல் மற்றும் கடல் வளங்கள் அமைச்சர் இராமலிங்கம் சந்திரசேகர் தெரிவித்துள்ளார்.

"தேசிய மக்கள் சக்தி அரசாங்கம்மீது புலம்பெயர் வாழ் இலங்கையர்களுக்கு நம்பிக்கை உள்ளது. எனவே, சில தீய சக்திகளால் பரப்பப்படும் கதைகளை அவர்கள் நம்பமாட்டார்கள்" என்றும் அவர் கூறியுள்ளார்.

யாழ். மாவட்டத்தில் உள்ள உள்ளூராட்சி சபைகளுக்கு தேசிய மக்கள் சக்தி சார்பில் தெரிவான உறுப்பினர்களின் உறுதியேற்பிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

மேலும், "இந்தியாவில் இருந்து நாடு திரும்பிய அகதி ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார். இதனையடுத்து இந்தியாவில் இருந்து வருபவர்களை அநுர அரசாங்கம் கைது செய்கிறது எனச் சிலர் குற்றச்சாட்டுகளை முன்வைத்து வருகின்றனர். அவரை அரசாங்கம் கைது செய்யவில்லை. இந்த விடயத்தில் உடனடியாக தலையிடப்பட்டுள்ளது. அதற்கமைய குறித்த நபருக்கு பிணை வழங்கப்பட வேண்டும் எனவும் பிணை வழங்குவதற்கு ஆட்சேபனை தெரிவிக்கக்கூடாது எனவும் ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது.

ஜனாதிபதி அநுர குமார திஸநாயக்கவின் ஆட்சிகாலத்தில் இந்நாடு கட்டியெழுப்படாவிட்டால் இலங்கைக்கு விமோசனம் கிடையாது என்பதே புலம்பெயர் தமிழர்களின் கருத்தாக உள்ளது. தீய குணம் படைத்த - தீய நோக்கத்துடன் செயல்படுமம் அரசியல் சக்திகள் உள்ளன. அந்த தீய சக்திகளை சுத்தப்படுத்த வேண்டும். அதனை நாம் செய்ய வேண்டும்" - என்றும் அவர் கூறினார்.

(ஐ)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

ஈழநாடு
Eelanadu — ඊළනාඩු
02.06.2025 திங்கட்கிழமை
விசுவாவசு வருடம், வைகாசி 19

**"ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்"**
- யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com
**தொலைபேசி : 021 205 2300**

## எதுவரையில்...?

அநுர குமார திஸநாயக்க அரசாங்கத்தின் ஊழல் தொடர்பான விசாரணையில் முன்னாள் அமைச்சர்கள் இருவர் தண்டிக்கப்பட்டுள்ளனர். இருவருமே ராஜபக்ஷக்களின் விசுவாசிகள். ஊழலற்ற நாட்டை கட்டியெழுப்பப் போவதான வாக்குறுதியின் அடிப்படையிலேயே தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் அதிகாரத்தை கைப்பற்றியது. கோட்டாபய ராஜபக்ஷவின் வீழ்ச்சியைத் தொடர்ந்து மக்கள் மத்தியில் ஒரேயொரு தெரிவாக தேசிய மக்கள் சக்தி எழுச்சியடைந்தது.

தேசிய மக்கள் சக்தியின் வசீகர முகமாக அநுர குமார திஸநாயக்க எழுச்சியுற்றார். ஆனால், உள்ளூராட்சித் தேர்தலில் எதிர்பாராதளவுக்கு தேசிய மக்கள் சக்தியின் வாக்கு வங்கி வீழ்ச்சியுற்றது. ஜனாதிபதித் தேர்தலில் ஐம்பது விகிதத்தை பெற முடியாத ஒருவராகவே அநுர குமார திஸநாயக்க வெற்றி பெற்றார். ஆனால், எவருமே கணித்திராத அளவுக்கு பாராளுமன்றத் தேர்தலில் அரிய பெரும்பான்மையை தேசிய மக்கள் சக்தி பெற்றது. ஆனால், உள்ளூராட்சித் தேர்தலில் மீண்டும் அதன் வாக்கு வங்கி பெருமளவுக்கு சரிந்திருக்கிறது.

இவ்வாறானதொரு பின்னணியில் மக்களுக்கு வழங்கிய வாக்குறுதியின் அடிப்படையில் சில விடயங்களை விரைவாக முன்னெடுக்க வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டிருக்கிறது. ஆனாலும், ஊழலுக்கு முடிவு கட்டப் போவதாக கூறியளவுக்கு அரசாங்கம் விடயங்களை முன்னெடுக்கவில்லை. மிகவும் சிறிய விடயங்களிலேயே கவனம் செலுத்தியிருந்தது. இந்தப் பின்புலத்தில்தான் தற்போது முன்னாள் அமைச்சர்கள் இருவர் ஊழல் குற்றச்சாட்டின் அடிப்படையில் தண்டனைக்கு உள்ளாக்கப்பட்டுள்ளனர். ஆனால், இந்த நகர்வு எதுவரையில் தொடரும்? ஏனெனில், தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் இதுவரையில் சக்திமிக்கவர்களை நோக்கிச் செல்லவில்லை. ராஜபக்ஷக்கள் மிகவும் அமைதியாகவே இருக்கின்றனர்.

தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் உண்மையில், இலக்கு வைக்க வேண்டியது ராஜபக்ஷக்களைத்தான். ஆனால், இதுவரையில் அவர்களை நோக்கிச் செல்லவில்லை. தங்களின் ஊழலை விசாரிக்குமாறு நாமல் ராஜபக்ஷ சவால் விடுமளவுக்கே நிலைமைகள் இருந்தன.

ராஜபக்ஷக்கள் தொடர்பில் பல்வேறு குற்றச்சாட்டுகள் முன்வைக்கப்பட்டன. ஒரு வகையில் தேசிய மக்கள் சக்தி அரசாங்கத்தின் பிரதான எழுச்சியே ராஜபக்ஷ எதிர்ப்பை அடிப்படையாகக் கொண்டே கட்டியெழுப்பப்பட்டது. ராஜபக்ஷக்களின் ஊழலும் குடும்ப சர்வாதிகாரமுமே நாட்டின் அதலபாதாள நிலைமைக்குக் காரணம் என்னும் பிரசாரமே முன்னெடுக்கப்பட்டது.

குறிப்பாக, பொருளாதார வங்குரோத்து நிலைமையை தொடர்ந்து கோட்டாபய ராஜபக்ஷவுக்கு எதிரான மக்களின் உணர்வு நிலையும் அதனை தங்களுக்கு சாதகமாக பயன்படுத்திக் கொண்ட ஜே. வி. பியின் சாதுர்யமும் ஒரு புதிய தலைமைக்கான தேவையையும் விருப்பத்தையும் சிங்கள மக்களிடத்தே உணரச் செய்தது.

ஆனால், தேசிய மக்கள் சக்தியிடம் பலமான பாராளுமன்ற அதிகாரம் இருந்தபோதிலும்கூட, ராஜபக்ஷக்கள்மீது முன்வைக்கப்பட்ட பிரதான குற்றச்சாட்டுகள் இதுவரையில் விசாரணைக்கு உள்ளாக்கப்படவில்லை. இவ்வாறானதொரு பின்புலத்தில்தான் ராஜபக்ஷ முகாமில் அங்கம் வகித்த அமைச்சர்கள் இருவர் தற்போது தண்டனைக்கு உள்ளாக்கப்பட்டுள்ளனர். இது அடுத்த கட்டத்தை நோக்கி நகருமா? அதற்கான அரசியல் ஆளுமை அநுர அரசாங்கத்திடம் இருக்கிறதா என்பதுதான் கேள்வி. இந்தக் கேள்விக்கான பதில்தான் அநுர அரசாங்கத்தின் ஆளுமையையும் அதேவேளை இயலாமையையும் பறைசாற்ற போகிறது.

# காணாமல் ஆக்கப்பட்டோருக்கு அநுர அரசு நீதிவழங்க வேண்டும்

## ரவிகரன் எம்.பி. வலியுறுத்தல்



முல்லைத்தீவு, ஜூன் 02

வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோர் விவகாரத்தில் முன்னைய இனவாத அரசுகள் செயல்பட்டதைப்போல தற்போதைய அரசும் செயல்படாது, காணாமல் ஆக்கப்பட்டோரது உறவுகளுக்கு உரிய நீதியை வழங்க அநுர அரசு முன்வர வேண்டுமென வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் துரைராசா ரவிகரன் வலியுறுத்தியுள்ளார்.

முல்லைத்தீவு - மாங்குளம் பகுதியில் நேற்று முன்தினம் சனிக்கிழமை முல்லைத்தீவு மாவட்ட வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோரது உறவுகளின் சங்கத்தினர், தமது தொடர் போராட்டத்தின் 3007ஆவது நாளில் ஆர்ப்பாட்டப் பேரணி ஒன்றை முன்னெடுத்தனர். இந்த ஆர்ப்பாட்டப் பேரணியில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

ரவிகரன் எம். பி. மேலும் கூறுகையில்,

காணாமல் ஆக்கப்பட்ட உறவுகள் விவகாரத்தில் அரசாங்கம் கவனயீனமாகச் செயல்படுகின்றது என்றுதான் சொல்லவேண்டும்.

கடந்த 2009ஆம் ஆண்டுக்குப் பிற்பாடு இராணுவத்திடம் கையளித்த உறவுகளை, மீளக் கையளிக்குமாறு அவர்களின் உறவுகள் தொடர்ச்சியாகக் கேட்டுக் கொண்டிருக்கின்றார்கள்.

குறிப்பாக எமது உறவுகள் வட்டுவாகல் பகுதியிலும் கைது செய்யப்பட்டார்கள், முகாம்களிலும் கைதுசெய்யப்பட்டார்கள் , கடலிலும் கைதுசெய்யப்பட்டனர்.

வெள்ளைவானில் கடத்தப்பட்டனர். இவ்வாறாக பலவழிகளிலும் எமது உறவுகளுக்கு கடந்தகால இனவாத அரசுகள் துன்பங்களை விளைவித்தன.

இவ்வாறு கையளிக்கப்பட்டு, கைதுசெய்யப்பட்டு, கடத்தப்பட்டு காணாமல் ஆக்கப்பட்டவர்களை மீளக் கையளிக்குமாறு கோரும் அவர்களது உறவுகளை அரசாங்கங்கள் தொடர்ந்து ஏமாற்றிவருகின்றன. இந்த நிலை மாறவேண்டும்.- என்றார். (எ)

எவ்வித பிரிவினையும் இன்றி

# அனைத்து மக்களுக்கும் சமவுரிமை அரசாங்கத்தின் நிலைப்பாடு இதுவே



யாழ்ப்பாணம், ஜூன் 02

"எவ்வித பிரிவினையும் இன்றி அனைத்து மக்களுக்கும் சம உரிமை என்பதே எமது அரசாங்கத்தின் நிலைப்பாடாகும்"

- இவ்வாறு கடற்றொழில் மற்றும் நீரியல் வளங்கள் அமைச்சர் இராமலிங்கம் சந்திரசேகர் தெரிவித்தார்.

இந்த நாட்டை விட்டு வெளியேற நினைக்கும் மக்கள் மத்தியில் முதலில் நாடு தொடர்பில் நம்பிக்கையை ஏற்படுத்த வேண்டும். எமது ஆட்சிக்காலத்தில் அதற்குரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் அமைச்சர் கூறினார்.

இலங்கை - கனடா வர்த்தக சம்மேளனத்தின் ஒருங்கிணைப்பில், "யாழ்ப் பாணம் முதலீடு மற்றும் வர்த்தக மன்றம் - 2025" தலைப்பிலான கலந்துரையாடல் அரியாலை ஜே ஹொட் டலில் நடைபெற்றது.


இதில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

"வடக்கை மேம்படுத்துவதில் ஜனாதிபதி உறுதியாக உள்ளார்.

முதலீட்டாளர்கள் வடக்குக்கு வரவேண்டும். இங்குள்ள துறைகளில் முதலீடுகளை செய்ய வேண்டும். இங்கு வந்துள்ள முதலீட்டாளர்களுக்கும் இந்த அழைப்பை விடுக்கின்றேன். புலம்பெயர் தமிழர்கள் இது தொடர்பில் கூடுதல் கரிசனை செலுத்த வேண்டும். முதலீட்டாளர்கள் பாதுகாக்கப்படுவார்கள். அவர்களுக்குரிய வசதிகள் செய்து கொடுக்கப்படும்.


தமிழ் மக்களின் இருப்பு பற்றி கவலை வெளியிடுகின்றனர். இங்குள்ளவர்கள் வெளிநாடுகளுக்கு செல்வதால்தான் இருப்புக்கு அச்சுறுத்தல் ஏற்படுகின்றது. எனவே, இலங்கை நம்பிக்கையான நாடுதான் என்ற நம்பிக்கையை அவர்கள் மத்தியில் ஏற்படுத்த வேண்டும்." - என்றார். (எ)

## அப்புக்குட்டி அண்ணையின் 'டவுட்'




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஜூன் - 02 திங்கட்கிழமை
விசுவாவசு வருடம் - வைகாசி 19
நல்ல நேரம்:6.00 - 7.30
ராகு காலம்:7.30 - 9.00
திதி : சப்தமி




**மேடம்**
பால்ய நண்பர்கள் உதவுவார்கள். வெளிவட்டாரத் தொடர்புகள் அதிகரிக்கும். தாயாரின் உடல் நலத்தில் கவனம் தேவை. புது வேலை கிடைக்கும். மகளுக்கு நல்ல வரன் அமையும்.

**இடபம்**
குடும்பத்தில் சுப நிகழ்ச்சிகளில் கலந்து கொள்வீர்கள். அரசாங்கத்தில் அதிகாரப் பதவியில் இருப்பவர்களின் நட்பு கிடைக்கும். எதிர்பார்த்த இடத்திலிருந்து நல்ல செய்தி வரும்.

**மிதுனம்**
கணவன்-மனைவீக்குள் அன்யோன்யம் அதிகரிக்கும். முகப்பொலிவு கூடும். வர வேண்டிய பணம் கைக்கு வரும். புதியவர்கள் நண்பர்களாவார்கள். மகிழ்ச்சியான நாள்.

**கடகம்**
ராசிக்குள் சந்திரன் இருப்பதால் வெளுத்த தெல்லாம் பாலாக நினைத்து சிலரிடம் சிக்கிக் கொள்ளாதீர்கள். கணவன்-மனைவிக்குள் கருத்து வேறுபாடுகள் வந்து நீங்கும்.

**சிம்மம்**
திட்டமிட்ட காரியங்களை அலைந்து திரிந்து முடிக்க வேண்டி வரும். திடீர் பயணங்கள் செலவுகளால் திணறுவீர்கள். வாகனத்தில் கவனம் தேவை. அதிகம் உழைக்க வேண்டிய நாள்.

**கன்னி**
எதிலும் வெற்றி பெறுவீர்கள். பெற்றோரின் ஆதரவு கிட்டும். காணாமல் போன முக்கிய ஆவணங்கள் கிடைக்கும். நாடி வந்தவர்களுக்கு உதவி செய்வீர்கள். தேவைகள் பூர்த்தியாகும் நாள்.

**துலாம்**
சொன்ன சொல்லை காப்பாற்றுவீர்கள். உங்களால் பயனடைந்தவர்கள் இப்போது உங்களுக்கு உதவி செய்வார்கள். பிள்ளைகளின் உணர்வுகளைப் புரிந்து கொள்ளுங்கள்.

**விருட்சிகம்**
குடும்பத்தில் ஒற்றுமை பிறக்கும். அரைகுறையாக நின்ற வேலைகள் முடியும். எதிர்பாராத இடத்திலிருந்து உதவிகள் கிடைக்கும். சுப நிகழ்ச்சியில் கலந்து கொள்வீர்கள். உற்சாகமான நாள்.

**தனுசு**
சந்திராஷ்டமம் இருப்பதால் சில வேலைகள் தடைப்பட்டு முடியும். மற்றவர்களுக்கு உதவி செய்யப் போய் உபத்திரவத்தில் சிக்கிக் கொள்ளாதீர்கள். நிதானம் தேவைப்படும் நாள்.

**மகரம்**
உங்கள் பலம் பலவீனத்தை உணர்வீர்கள். சகோதர வகையில் உதவிகள் கிடைக்கும். விலை உயர்ந்த ஆபரணம் வாங்குவீர்கள். கல்யாண முயற்சிகள் பலிதமாகும்.

**கும்பம்**
எதிர்பாராத பணவரவு கிடைக்கும். பிள்ளைகளால் மதிக்கப்படுவீர்கள். அரசால் அனுகூலம் உண்டு. வழக்கில் நல்ல தீர்ப்பு வரும். வியாபாரத்தில் அதிரடியான திட்டங்கள் திட்டுவீர்கள்.

**மீனம்**
குடும்பத்தின் அடிப்படை வசதிகளை மேம்படுத்துவீர்கள். அக்கம்-பக்கம் வீட்டாரின் அன்புத் தொல்லை குறையும். சிக்கனமாக செலவழித்து சேமிக்கத் தொடங்குவீர்கள்.

# 123 இந்திய இழுவை படகுகளை கடலுக்குள் போட நடவடிக்கை

## கடற்தொழில் நீரியல் வள அதிகாரி தகவல்

யாழ்ப்பாணம், ஜூன் 02

இலங்கை கடற்பரப்புக்குள் அத்துமீறி நுழைந்த குற்றச்சாட்டில் தடுத்து வைக்கப்பட்டுள்ள சுமார் 123 இந்திய இழுவைப் படகுகளை அறிவித்தல் கிடைத்ததும் கடலுக்குள் போடுவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என கடற்தொழில் நீரியல் வளத் திணைக்களத்தின் யாழ். மாவட்ட உதவிப் பணிப்பாளர் தெரிவித்தார்.

அமைச்சர் இராமலிங்கம் சந்திரசேகர் தலைமையில் யாழ். மாவட்ட செயலக கேட்போர் கூடத்தில் கடந்த வெள்ளிக்கிழமை நடைபெற்ற மாவட்ட அபிவிருத்தி தொடர்பான கலந்துரையாடலின் போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

சுமார் நான்கு வருடங்களாக யாழ். மயிலிட்டி துறைமுகத்தில் இந்திய இழுவைப் படகுகள் தடுத்து வைக்கப்பட்டுள்ளன.

இந்தப் படகுகள் தரித்து நிற்பதால் எமது உள்ளூர் மீனவர்கள் தமது படகுகளை நிறுத்துவதில் பெரும் இடர்பாடுகளை எதிர்நோக்கி வருகின்றனர்.

இதன் காரணமாக குறித்த படகுகளை கடலில் புதைப்பதற்கான ஏற்பாடுகள் நடைபெற்று வருகின்ற நிலையில் கடலுக்கு ஆபத்தை ஏற்படுத்தக்கூடிய உபகரணங்களை குறித்த இழுவைப் படகுளிலிருந்து அகற்றும் நடவடிக்கைகள் இடம் பெற்று வருகிறன.

பாதுகாப்பு அமைச்சின் அனுமதி கிடைத்ததும் படகுகளை கடலுக்குள் போடுவதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்படும்- என்றார். (எ)

# வவுனியாவில் இரு நூல்கள் வெளியீட்டு விழா



வவுனியா, ஜூன் 02


விஜய் படைப்பகத்தின் இரண்டாவது வெளியீட்டு நிகழ்வாக பெரியதம்பி எழுதிய மல்லாவியும் என் மறுபிறவியும் அனுஹரி வன்னி எழுதிய சூழ்நிலைக் கைதி நூல் வெளியீட்டு விழா நேற்று முன்தினம் வவுனியா சுத்தானந்த இந்து இளைஞர் சங்க மண்டபத்தில் நடைபெற்றது.

மூத்த இலக்கியவாதி தமிழ்மணி, முனைவர் மேழிக்குமரன் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் நூலாசிரியர்கள் பற்றிய அறிமுக உரையை ந. நவரூபன் நிகழ்த்தினார். நயவுரையை தமிழாசிரியரும் கவிஞருமான வே. முல்லைத்தீபன் மற்றும் எழுத்தாளரும் ஊடகவியலாளருமான ந. கபிலநாத் ஆகியோர் ஆற்றினர்.

மேலும், நூலாசிரியர்களால் நூல்களின் பிரதிகள் விருந்தினர்களுக்கு வழங்கப்பட்டன. நூலாசிரியர்களுக்கான கௌரவமளிப்பும் நடைபெற்றது.

இந்த நிகழ்வில், பிரதம விருந்தினராக யாழ். தேசிய கல்வியற்கல்லூரி ஓய்வுநிலை பீடாதிபதி கலாநிதி சுப்பிரமணியம் பரமானந்தமும் சிறப்பு விருந்தினர்களாக வவுனியா தெற்கு வலய ஆசிரிய ஆலோசகர் திருமதி த. நிறைமதி, மாவட்ட கலாசார உத்தியோகத்தர் திருமதி ஜெ. தட்சாயினி மற்றும் கௌரவ விருந்தினர்களாக இலக்கிய ஆர்வலர் கலாபூஷணம் நா. தியாகராஜா, எழுத்தாளர் ஆன்மீகச்சுடர் சி. சிவசோதி, தமிழ் விருட்சம் அமைப்பின் தலைவர் சந்திரகுமார் கண்ணன், இலக்கிய ஆர்வலர்கள், பொதுமக்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர். (எ-10)




சுட்டுப்படுகொலை செய்யப்பட்ட ஊடகவியலாளர் ஐயாத்துரை நடேசனின் 21 ஆவது ஆண்டு நினைவேந்தல் நிகழ்வு யாழ். வடமராட்சி ஊடக இல்லத்தில் நேற்று முன்தினம் நடைபெற்றது.

# யோகக்கலை கற்கைநெறி

யாழ்ப்பாணம், ஜூன் 02

வடக்கு மாகாண கல்வி அமைச்சின் இளைஞர் விவகார அலகினால் உடல், உள மேம்பாட்டுக்காக இலவசமாக நடத்தப்பட்டு வருகின்ற யோகக்கலை அடிப்படை கற்கைநெறியின் புதிய பிரிவு நல்லூர் மங்கையற்கரசி வித்தியாலயத்தில் எதிர்வரும் சனிக்கிழமை காலை 06 மணிக்கு ஆரம்பமாகவுள்ளது.

சனி, ஞாயிறு தினங்களிலும் அரச விடுமுறை தினங்களிலும் காலை 06. 00 மணிமுதல் நடைபெறும் இந்த வகுப்புகளில் ஆர்வமுள்ள இரு பாலாரும் வயது வேறுபாடின்றி கலந்து கொள்ள முடியும். சுமார் மூன்று மாதங்களைக் கொண்ட இந்த அடிப்படைக் கற்கைநெறியை பூரணமாக முடிப்பவர்களுக்கு கல்வி அமைச்சால் அங்கீகரிக் கப்பட்ட சான்றிதழ் வழங்கப்படும். பயிலவிரும்புவோர் அன்றைய தினம் நேரடியாக வந்து பதிவுகளை மேற்கொண்டு வகுப்பில் இணையலாம். மேலதிக தகவல்களை 021 222 2203 எனும் தொலைபேசி இலக்கங்களுடன் தொடர்புகொண்டு பெற்றுக்கொள்ளலாம் எனவும் கல்வி அமைச்சின் செயலாளர் அறிவித்துள்ளார். (எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆறு மாத காலத்துக்குள் அரசை குறைகூறமுடியாது

## முன்னாள் நீதி அமைச்சர் விஜயதாஸ

கொழும்பு, ஜூன் 02

"நாட்டில் சிறந்த மாற்றத்தை ஏற்படுத்த அரசாங்கம் முயற்சிக்கிறது. ஆறு மாத காலத்துக்குள் அரசாங்கத்தை குறை கூற முடியாது. ஊழல் மோசடியாளர்களுக்கு எதிராக கடுமையான நடவடிக்கைகளை எடுக்கும் வகையில்தான் ஊழல் எதிர்ப்பு சட்டத்தை உருவாக்கினோம். இந்த சட்டத்தின் பிரகாரம் கடுமையான நடவடிக்கைகளை அரசாங்கம் மேற்கொள்ள வேண்டும்", என்று முன்னாள் நீதியமைச்சர் விஜயதாஸ ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.



கொழும்பில் நடத்திய செய்தியாளர் சந்திப்பிலேயே இவ்வாறு குறிப்பிட்ட அவர் மேலும் கூறுகையில்,மக்கள் விடுதலை முன்னணியும் ஐக்கிய மக்கள் சக்தியும் ஒன்றிணைந்து இந்த அரசாங்கத்தை தோற்றுவிக்கவில்லை. ரணில் விக்கிரமசிங்கவும், ராஜபக்ஷர்களும் ஒன்றிணைந்து இந்த அரசாங்கத்தை தோற்றுவிப்பதற்கான சூழலை ஏற்படுத்தினார்கள்.

நாடு வங்குரோத்து நிலையை அடைந்ததைத் தொடர்ந்து அரசியல் கட்டமைப்பு தொடர்பில் நாட்டு மக்கள் கடும் அதிருப்தி கொண்டிருந்தார்கள். இவ்வாறான நிலையில் மாற்றீடு ஒன்று இல்லாததால்தான் தேசிய மக்கள் சக்தி தலைமையிலான அரசாங்கத்தை தோற்றுவித்தார்கள். ஜனநாயக ரீதியில் மக்கள் இந்த அரசாங்கத்தை ஸ்தாபித்துள்ளார்கள்.

நாட்டில் சிறந்த மாற்றத்தை ஏற்படுத்த அரசாங்கம் முயற்சிக்கிறது. சிறந்த தீர்மானங்களுக்கு அரசியல் நோக்கங்களுக்கு அமைப்பால்பட்ட வகையில் அனைவரும் ஒத்துழைப்பு வழங்க வேண்டும். ஆறு மாத காதத்துக்குள் அரசாங்கத்தின் செயற்பாடுகளை விமர்சிக்க முடியாது - குறைகூற முடியாது.

ஊழல் மோசடியால்தான் இந்த நாடு வங்குரோத்து நிலையடைந்தது என்பதை அனைவரும் ஏற்றுக்கொள்ள வேண்டும். ஊழலை இல்லா தொழிக்கவும், ஊழல்வாதிகளுக்கு கடுமையான தண்டனை வழங்கவும் 2023 ஆம் ஆண்டு 09 ஆம் இலக்க ஊழல் எதிர்ப்பு சட்டத்தை உருவாக்கினோம். இந்த சட்டத்தின் பிரகாரம் அரசாங்கம் கடுமையான நடவடிக்கைகளை எடுக்க வேண்டும்- என்றார். (ஐ)

# சீரற்ற வானிலை: கடற்படையின் 120 குழுக்கள் மீட்பு, நிவாரண நடவடிக்கையில்

கொழும்பு, ஜூன் 02

நாட்டில் நிலவும் சீரற்ற வானிலையால் மக்களுக்கு நிவாரணம் வழங்குவதற்கு கடற்படையின்120 குழுக்கள் கடமையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளன.

12 மாவட்டங்களில் குறித்த குழுக்கள் சேவையில் ஈடுப்படுத்தப்பட்டுள்ளன என்று கடற்படை பேச்சாளர் கப்டன் புத்திக்க சம்பத் தெரிவித்துள்ளார்.

பாதிக்கப்பட்ட மக்களை மீட்பதற்காக விமானப் படையின் 4 குழுக்கள் ஈடுபடுத்தப்பட்டுள்ளன. இதற்காக பெல் 412 ரக விமானமும் தயார் நிலையில் உள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ)

# பயிர்ச்சேதம் குறித்து மதிப்பிடுவதற்கு குழு

கொழும்பு, ஜூன் 02

நிலவும் சீரற்ற வானிலையால் நாடு முழுவதும் ஏற்பட்டுள்ள பயிர்ச்சேதம் தொடர்பில் மதிப்பிடுவதற்காக குழு ஒன்று அமைக்கப்பட்டுள்ளது.

இந்தக் குழு 25 மாவட்டங்களிலும் பயிர்ச்சேதம் தொடர்பில் ஆராயவுள்ளது. இந்த விடயம் தொடர்பில் அடுத்தகட்ட நடவடிக்கைகளுக்காக மாவட்ட பணிப்பாளர்களுக்கு ஆலோசனைகள் வழங்கப்பட்டுள்ளன என்று விவசாய மற்றும் கமநல காப்புறுதி சபையின் தலைவர் பேமசிறி ஜாசிங் ஆராச்சி தெரிவித்தார்.

எதிர்காலத்தில் நட்டஈடு வழங்க நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் அவர் கூறியுள்ளார். (ஐ)

# மேலும் இருவருக்கு அமைச்சு பதவிகள்!

கொழும்பு, ஜூன் 02

தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் மேலும் இரண்டு அமைச்சர்களை நியமிக்கவுள்ளது என்று அந்தக் கட்சியின் வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

ஜனாதிபதி அநுர குமார திஸநாயக்க தலைமையிலான அரசாங்கத்தின் அமைச்சரவையில் தற்போது 23 பேர் அங்கம் வகிக்கின்றனர். இந்த எண்ணிக்கையை 25 ஆக அதிகரிப்பதற்கு திட்டமிடப்பட்டுள்ளது. எதிர்வரும் வாரங்களில் இந்த நியமனம் மேற்கொள்ளப்படவுள்ளது.

பிரதி சபாநாயகர் ரிஸ்வி சாலி அல்லது பிரதி அமைச்சர் முனிர் முலபருக்கு இராஜங்க அமைச்சர் அல்லது அமைச்சரவை அந்தஸ்துடைய அமைச்சர் பதவி வழங்கப்பட உள்ளது. அமைச்சரவையில் முஸ்லிம் பிரதிநிதித்துவம் இல்லாததால் இந்த நடவடிக்கை எடுக்கப்படவுள்ளதாகக் கூறப்படுகிறது.

மேலும், புதிய ஒருவருக்கு அமைச்சர் பதவி வழங்குவதற்கு திட்டமிடப்பட்டுள்ளதாகவும் இறுதித் தீர்மானம் எதுவும் எடுக்கப்படவில்லை எனவும் தெரிவிக்கப்படுகிறது.

எவ்வா றெனினும், இந்த அமைச்சரவை மாற்றம் தொடர்பில் ஆளும் தரப்பில் அதிகாரபூர்வமாக இதுவரையில் அறிவிப்புகள் எதனையும் வெளியிடவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

# சீரற்ற வானிலையால் 2,600 கட்டடங்கள் சேதம்!

கொழும்பு, ஜூன் 02

சீரற்ற வானிலையால் நாட்டில் சுமார் 2 ஆயிரத்து 600 வீடுகள், கட்டடங்கள் சேதமடைந்துள்ளன என்று தேசிய கட்டட ஆராய்ச்சி நிறுவனம் தெரிவித்துள்ளது.

இதன்படி, 2 ஆயிரத்து 576 வீடுகள் பகுதியளவு சேதமடைந்துள்ளன. அத்துடன், 6 வீடுகள் முற்றிலும் சேதமடைந்துள்ளன. 8 வணிக வளாகங்களும் சேதமடைந்துள்ளன. சேத மதிப்பீட்டு செயன்முறை நடக்கின்றன என்று தேசிய கட்டட ஆராய்ச்சி நிறுவனம் மேலும் தெரிவித்துள்ளது. (ஐ)

# ஆபத்தாக மாறிவரும் மருதானை மேம்பாலம்



கொழும்பு, ஜூன் 02

கொழும்பு - மருதானை மேம்பாலம் ஆபத்தான நிலைமையில் காணப்படுகிறது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

தலைநகர் கொழும்பில் 1978ஆம் ஆண்டு இந்த மேம்பாலம் கட்டப்பட்டது. நீண்டகாலம் பராமரிக்கப்படாத இந்தப் பாலம் மக்களுக்கு ஆபத்தானதாக மாறி வருகிறது.

எனினும், இது தொடர்பில் பொறுப்பானர்கள் எவரும் நடவடிக்கை எடுக்கவில்லை என்று தெரிவிக்கப்படுகிறது. (ஐ)

# விபத்தில் ஒருவர் பலி!




கொழும்பு, ஜூன் 02

பேருந்து மோட்டார் சைக்கிளை மோதியதில் ஒருவர் உயிரிழந்தார்.

காலி - கொழும்பு பிரதான வீதியின் காலி - நாகொடை - பயாகலை பகுதியில் நேற்று ஞாயிற்றுக்கிழமை இந்த விபத்து இடம்பெற்றது.

அம்பாந்தோட் டையிலிருந்து கொழும்பு நோக்கி பயணித்த பேருந்து மோதியே இந்த விபத்து இடம்பெற்றது. இதில், மோட்டார் சைக்கிளில் பயணித்தவரே உயிரிழந்தார். (ஐ)

# இலஞ்சம், ஊழல் குறித்து 1,726 முறைப்பாடுகள்!

கொழும்பு, ஜூன் 02

நடப்பு ஆண்டின் முதல் நான்கு மாதங்களில் இலஞ்சம் அல்லது ஊழல் குற்றச்சாட்டுகள் தொடர்பாக ஆயிரத்து 726 முறைப்பாடுகள் கிடைத்துள்ளன என்று இலஞ்சம் அல்லது ஊழல் ஒழிப்பு ஆணைக் குழு தெரிவித்துள்ளது.

இவற்றில், ஆயிரத்து 352 முறைப்பாடுகள் முறைப்பாட்டு குழுவிடம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன. மேலும், 200 முறைப்பாடுகள் குறித்து விசாரணைக்கு உத்தரவிடப்பட்டுள்ளன.

போதுமான ஆதாரங்கள் இல்லாததாலும், இலஞ்ச சட்டத்துக்கு பொருத்தமற்றதாலும் 450 முறைப்பாடுகள் விசாரிக்க வேண்டியதில்லை என்று உத்தரவிடப்பட்டுள்ளது.

சுமார் 234 முறைப்பாடுகள் பிற நிறுவனங்களுக்கு அனுப்பப்பட்டுள்ளன.

மேலும் 147 முறைப்பாடுகளின் அறிக்கைகளைப் பதிவு செய்ய புலனாய்வு பிரிவுக்கு அனுப்பப்பட்டுள்ளன.

அறிக்கைகள் மற்றும் பிற கூடுதல் விடயங்களுக்காக 321 முறைப்பாடுகள் பரிந்துரைக்கப்பட்டுள்ளன என்றும் இலஞ்சம் அல்லது ஊழல் ஒழிப்பு ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

இதேவேளை, 33 வழக்குகளை இந்த ஆணைக்குழு உயர் நீதிமன்றில் தாக்கல் செய்துள்ளது. இதில் இலஞ்சம் தொடர்பான 24 வழக்குகள், ஊழல் தொடர்பான 7 வழக்குகள் மற்றும் நிதி மோசடி தொடர்பான 2 வழக்குகளும் அடங்கும் என்றும் தெரிவிக்கப்பட்டது. (ஐ)

# அபாயமிக்க மரங்களை வெட்டியகற்ற 5 குழுக்கள்

கொழும்பு, மே 02

அபாயமிக்க மரங்களை அடையாளம் கண்டு அவற்றை அகற்றுவதற்காக ஐந்து விசேட குழுக்கள் ஈடுபடுத்தப்பட்டுள்ளன என்று கொழும்பு மாநகர சபை தெரிவித்துள்ளது.

பலத்த மழை, காற்றால் கொழும்பு மாநகர சபைக்குட்பட்ட பகுதிகளில் மரங்கள், கிளைகள் முறிந்து விழுந்த 35 சம்பவங்கள் பதிவாகியுள்ளன.

இவற்றில் அதிகமானவை தனியார் இடங்களை அண்மித்த பகுதிகளில் பதிவாகின.

விஹாரமஹாதேவி பூங்காவில் மரம் முறிந்து வீழ்ந்த 10 சம்பவங்கள் பதிவாகியுள்ளன என்றும் கொழும்பு மாநகர சபை தெரிவித்துள்ளது. (ஐ)

# அனர்த்தம் பாதித்த இடங்களை பார்வையிட்டார் பிரதி அமைச்சர்

கொழும்பு, மே 02

பலத்த மழை, காற்றால் பாதிக்கப்பட்ட கொழும்பு - கொலன்னாவை பிரதேசத்தை பிரதியமைச்சர் எரங்க குணசேகர நேரில் சென்று பார்வையிட்டுள்ளார்.

பலத்த காற்றால் சேதமடைந்த வீடுகள் தொடர்பிலும் அவர் இதன்போது ஆராய்ந்தார்.

மீதொட்டமுல்ல, சேதவத்தை, வெஹெரகொடெல்ல, வெல்லம்பிட்டி, கொதட்டுவ உள்ளிட்ட பகுதிகளையே பிரதி அமைச்சர் பார்வையிட்டார்.

இதன்போது, பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரணம் வழங்குவது தொடர்பிலும் பிரதி அமைச்சர் ஆராய்ந்தார். (ஐ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தேசிய வரி வாரம் இன்று ஆரம்பம்!

கொழும்பு, ஜூன் 02

தேசிய வரி வாரம் இன்று திங்கட்கிழமை முதல் ஆரம்பமாகிறது. இதன் தொடக்க நிகழ்வு ஜனாதிபதி அநுர குமார திஸநாயக்க தலைமையில் ஜனாதிபதி செயலகத்தில் நடைபெறவுள்ளது.

"வரி சக்தி" என்ற பெயரில் வரி வாரத்தை செயல்படுத்த அரசாங்கம் முடிவு செய்துள்ளது.

அத்துடன், இன்று தல் எதிர்வரும் 7 ஆம் திகதி வரை வரி செலுத்துதல் குறித்து பொது மக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தப்படும் என்று உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தின் பிரதி ஆணையர் நாயகம் பி. கே.எஸ். சாந்த தெரிவித்தார்.

இதனிடையே, ஒரு கோடிக்கும் அதிகமானவர்களுக்கு ரி. ஐ. என். இலக்கம் வழங்கப்பட்டுள்ளதாக ஜனாதிபதியின் மேலதிக செயலாளர் யு. டி. என். ஜயவீர தெரிவித்தார். (ஐ)

## சீரற்ற வானிலையால் 10,270 பேர் பாதிப்பு!

கொழும்பு, ஜூன் 02

**நிலவும் சீரற்ற வானிலை காரணமாக 14 மாவட்டங்களில் பிரிவுகளில் 2 ஆயிரத்து 757 குடும்பங்களை சேர்ந்த 10 ஆயிரத்து 270 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர் என்று அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையத்தின் பணிப்பாளர் பிரதீப் கொடிப்பிலி தெரிவித்துள்ளார்.**

பெய்து வரும் பலத்த மழையை கருத்தில் கொண்டு நாடு முழுவதும் உள்ள பல நீர்த்தேக்கங்களின் வான் கதவுகள் திறக்கப்பட்டுள்ளன என்றும் அவர் கூறினார்.

இதனிடையே, காலி, கண்டி, கேகாலை, நுவரெலியா, இரத்தினபுரி மாவட்டங்களின் பல பிரதேச செயலர் பிரிவுகளில் மண்சரிவு எச்சரிக்கை விடுக்கப்பட்டதாக தேசிய கட்டிட ஆராய்ச்சி நிறுவனத்தின் சிரேஷ்ட புவியியலாளர் கலாநிதி வசந்த சேனாதீர தெரிவித்துள்ளார்.

சீரற்ற வானிலை காரணமாக முழுமையாகவோ அல்லது பகுதியாகவோ சேதமடைந்த வீடுகளுக்கு இழப்பீடு வழங்கப்படும் என்று பாதுகாப்பு அமைச்சின் மேலதிக செயலாளர் (அனர்த்த முகாமைத்துவ பிரிவு) கே. ஜி. தர்மதிலக தெரிவித்துள்ளார்.

வீடுகளுக்கு ஏற்பட்ட சேதங்களுக்கு மேலதிகமாக, அனர்த்தங்களால் காயமடைந்தவர்களுக்கு ஏதேனும் குறைபாடுகள் ஏற்பட்டால் அவர்களுக்கு இழப்பீடு வழங்கப்படும் என்றும் அவர் கூறினார். (ஐ)

## 3.6 கிலோ ஹெரோயினுடன் சந்தேகநபர் ஒருவர் கைது!

கொழும்பு, ஜூன் 02

3.6 கிலோ ஹெரோயின் போதைப் பொருளுடன் ஒருவர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

கம்பஹா - வெயங்கொடை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட நைவலவத்தையில் நேற்று முன்னதினம் சந்தேகநபர் கைது செய்யப்பட்டார்.

இதன்போது, போதைப்பொருள் கடத்தலுக்கு பயன்படுத்தப்பட்ட வான் மற்றும் அளவீடு செய்யும் கருவிகள் என்பனவும் கைப்பற்றப்பட்டன.

சந்தேகநபர் எசெல்ல பகுதியைச் சேர்ந்த 26 வயதுடையவர் என்று வெயங்கொடை பொலிஸார் தெரிவித்தனர். (ஐ)

## மகிந்தானந்த, நளினுக்கு சிறை அச்சக பிரிவில் பணி!

கொழும்பு, ஜூன் 02

நீதிமன்றத்தால் கடூழிய சிறை தண்டனை வழங்கப்பட்டுள்ள முன்னாள் அமைச்சர்களான மகிந்தானந்த அளுத்கமகே, நளின் பெர்ணான்டோ ஆகியோருக்கு வெலிக்கடை சிறைச்சாலையில் அச்சக பிரிவில் பணி வழங்கப்பட்டுள்ளது.

ஆயுள் தண்டனை கைதிகள், மற்றும் கொலை, பாலியல் வன்புணர்வு குற்றக் கைதிகளும் அடைக்கப்பட்டுள்ள பகுதியிலிருந்து இருவரையும் பிரித்து வைத்துள்ளதாகவும் தெரிய வருகிறறது. இருவரின் பாதுகாப்பையும் கருத்தில் கொண்டே இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

சிறைச்சாலைக்கு தேவையான ஆவணங்களை இந்த அச்சகப் பிரிவே அச்சிட்டு வருகிறது என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

## பாணந்துறை துப்பாக்கிச் சூடு 3ஆவது சந்தேகநபரும் கைது!

கொழும்பு, ஜூன் 02

பாணந்துறையில் கடந்த 29ஆம் திகதி நடந்த துப்பாக்கிச் சூட்டு சம்பவத்துக்கு உதவினா என்ற சந்தேகத்தில் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

கைதானவர் பாணந்துறை, கவிராஜ மாவத்தையை சேர்ந்த 24 வயதான இளைஞராவார்.

இதுவரை நடத்தப்பட்ட விசாரணைகளில், துப்பாக்கிச் சூடு நடத்திய நபரும், மோட்டார் சைக்கிள் செலுத்துநரும் சம்பவ தினத்துக்கு முதல் நாளிரவு சந்தேக நபரின் வீட்டில் தங்கியிருந்தனர் என்று கூறப்படுகிறது.

கைதான சந்தேக நபர் பாணந்துறை நீதிவான் நீதிமன்றத்தில் முற்படுத்தப்படவுள்ளார். (ஐ)

## ரயில் தடம்புரள்வு சேவைகள் பாதிப்பு

கொழும்பு, ஜூன் 02

நுவரெலியா - கலபொடை ரயில் நிலையம் அருகே நேற்று ஞாயிற்றுக்கிழமை காலை ரயில் ஒன்று தடம் புரண்டது. இதனால், பிரதான மார்க்கத் தில் ரயில் சேவைகள் பாதிக்கப்பட்டன.

பதுளையிலிருந்து கொழும்புக்கு இயக்கப்படும் இரவு நேர அஞ்சல் ரயில் ஒன்றே தடம் புரண்டதாக ரயில் திணைக்கள கட்டுப்பாட்டு அறை தெரிவித்தது. (ஐ)

## குழந்தைகளிடையே நோய் பரவல் உயர்வு

கொழும்பு, ஜூன் 02

குழந்தைகளிடையே இன்புளுவன்ஸா, சிக்குன்குனியா, டெங்கு நோய்களின் பரவல் அதிகரித்து வருகிறது என்று லேடி ரிட்ஜ்வே சிறுவர் மருத்துவமனையின் மருத்துவ நிபுணர் தீபால் பெரேரா தெரிவித்துள்ளார்.

அண்மைக்காலமாக நிலவும் சீரற்ற வானிலையால், டெங்கு, சிக்குன்குனியா நோய்களின் தாக்கம் அதிகரித்துள்ளது. எனவே, நுளம்புகள் பெருகும் இடங்களை அழிப்பதில் அனைவரும் கவனம் செலுத்த வேண்டும் என்றும் அவர் சுட்டிக்காட்டினார்.

டெங்கு, சிக்குன்குனியா அறிகுறிகளை கொண்ட சிறுவர்கள் மருத்துவமனைகளில் சேர்க்கப்பட்டுள்ளன. டெங்கு நோய் தாக்குவது ஆபத்தானது. சிக்குன்குனியா ஏற்பட்ட பிறகு மக்கள் பல மாதங்களுக்கு மூட்டு வலியால் அவதிப்படுவார்கள் என்றும் மருத்துவர் தெரிவித்தார்.

அத்துடன் கர்ப்பவதி தாய்மார், முதியவர்கள் சிக்குன்குனியாவால் பாதிக்கப்பட்டால், அது தீவிரமாக இருக்கலாம். இந்த நிலைமை கர்ப்பவதி தாய்மார்களுக்கு பிறக்கும் குழந்தையையும் பாதிக்கலாம். இந்த நிலைமையில், இன்புளுவன்ஸா நோய் தாக்கமும் சிறுவர்களை தாக்கி வருகிறது. எனவே, இது விடயத்தில் பொது மக்கள் விழிப்புடன் செயல்பட வேண்டும் என்றும் அவர் கூறினார். (ஐ)

## பண சூதாட்ட ஒழுங்குபடுத்தல் அதிகார சபையை நிறுவ சட்டம்

கொழும்பு, ஜூன் 02

பண சூதாட்டத்தை ஒழுங்குபடுத்தும் அதிகார சபையை நிறுவுவதற்கான சட்டமூலம் ஒன்றை அரசாங்கம் வர்த்தமானியில் வெளியிட்டுள்ளது.

இதன்படி, 2025ஆம் ஆண்டின் பணச்சூதாட்டத்தை ஒழுங்குபடுத்தும் சட்டம் என்ற சுருக்கப் பெயரை கொண்ட குறித்த சட்டமூலமானது, பணச்சூதாட்டத்தை ஒழுங்குபடுத்தும் அதிகாரச பையைத் நிறுவவும் 44ஆம் அத்தியாயமான குதிரை பந்தயத்தின்மீது பந்தயம் பிடித்தல் கட்டளை சட்டத்தையும் 46ஆம் அத்தியாயமான சூதாட்ட கட்டளைச் சட்டத்தையும் 2010ஆம் ஆண்டின் 17ஆம் இலக்க சீட்டாட்டத் தொழில் (ஒழுங்குபடுத்தல்) சட்டத்தை நீக்குவதற்காக ஏற்பாடு செய்வதற்கும் அவற்றுடன் தொடர்புபட்ட அலல்து இடைநேர்விளைவான கருமங்களுக்காக ஏற்பாடு செய்வதற்குமான உள்ளடக்கத்தைக் கொண்டுள்ளது.

அத்துடன்,

இச்சட்டத்தின் ஏற்பாடுகள் 1997ஆம் ஆண்டின் 20ஆம் இலக்க அபிவிருத்தி லொத்தர் சபை சட்டத்தின் ஏற்பாடுகளின் கீழ் நிறுவப்பட்டுள்ள அபிவிருத்தி லொத்தர் சபையாலும் 1963ஆம் ஆண் டின் 11ஆம் இலக்க நிதிச் சட் டத்தினது ஏற்பாடுகளின் கீழ் நிறுவப்பட்ட தேசிய லொத்தர்கள் சபையினாலும் நடத்தப்பட்ட லொத்தர்கள் மற்றும் சமூக பணச் சூதாட்டம் தவிர எல்லா வகையான பணச் சூதாட்டங்களுக்கும் ஏற்புடை யனவாதல் வேண்டும் என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது.

மேலும், குறித்த அதிகார சபையானது, சிறுவர்களை பணச்சூதாட்டத்திலிருந்து பாதுகாத்தல், பணச்சூதாட்டத்துடனான குற்றச்செயல்களின் வரும்படிகளை தூயதாக்கல் செய்யப்படுவதை தடுத்தல், அமைதி குலைவின் மூலமொன்றாக பணச்சூதாட்டம் இருப்பதை தடுத்தல், சமூகத் தீங்கைக் குறைத்தல், சட்டமுறையற்ற செயற்பாடுகளை தடுத்தல், பொறுப்புள்ள பணச்சூதாட்டத்தை வளர்த்தல், சுற்றுலாப் பயணிகளை கவர்வதற்கான வசதிகளை வழங்குதல், நேர்மை நியாயத்தன்மையை உறுதிப்படுத்தல், வெளிப்படையான முறையில் முன்னெடுக்கப்படுதலை உறுதி செய்தல், பொது மக்களின் நம்பிக்கையை ஏற்படுத்தல், பொருளாதார அபிவிருத்தியை மேம்படுத்தல், நல்லாட்சியை உறுதிப்படுத்தல், அரசிறை சேமிப்பை ஒழுங்குபடுத்தல் ஆகியவை நோக்கங்களாக குறிப்பிடப்பட்டுள்ளன. (ஐ)

## மே மாதத்தில் 120,120 சுற்றுலாவிகள்

கொழும்பு, மே 02

மே மாதத்தில் முதல் 28 நாட்களில் மட்டும் ஒரு இலட்சத்து 20 ஆயிரத்து 120 சுற்றுலா பயணிகள் நாட்டுக்கு வருகை தந்துள்ளனர் என்று சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபை தெரிவித்துள்ளது.

இதன்மூலம், இந்த வருடத்தில் மட்டும் 10 இலட்சத்து 17 ஆயிரத்து 4 சுற்றுலா பயணிகள் நாட்டுக்கு வந்துள்ளனர். கடந்த வருடம் இதே மாதம் ஒரு இலட்சத்து 12 ஆயிரத்து 128 சுற்றுலா பயணிகள் வருகை தந்திருந்தனர் என்றும் தெரிவிக்கப்பட்டது.

இலங்கை வந்தவர்களில் அதிகளவானோர் இந்தியாவிலிருந்து வருகை தந்துள்ளனர். 42 ஆயிரத்து 899 பேர் அந்த நாட்டிலிருந்து வருகை தந்துள்ளனர். பிரிட்டனிலிருந்து 8 ஆயிரத்து 382 பேரும், சீனாவிலிருந்து 7 ஆயிரத்து 965 பேரும் வருகை தந்துள்ளனர். தவிர, ஜேர்மனி, பங்களாதேஷ், அவுஸ்திரேலியா, ரஷ்யா நாடுகளிலிருந்தும் சுற்றுலாவிகள் அதிகளவில் வருகை தந்துள்ளனர் என்றும் சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபை தெரிவித்துள்ளது. (ஐ)

## போதைப்பொருளுடன் கைதான பிரிட்டிஷ் பெண்ணுக்கு மறியல்!

கொழும்பு, ஜூன் 02

46 கிலோகிராம் நிறையுடைய குஷ் ரக போதைப்பொருளுடன் கட்டுநாயக்காவில் அண்மையில் கைதான பிரிட்டிஷ் பெண் மீண்டும் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

நேற்று முன்தினம் அவர் நீர்க்கொழும்பு மேலதிக நீதிவான் தர்ஷிமா பிரேமரத்ன முன்னிலையில் முற்படுத்தப்பட்டபோதே, அவரை எதிர்வரும் 13ஆம் திகதி வரை மீள விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிடப்பட்டது.

21 வயதான அவர் விமான பணிப்பெண் என்று தெரியவந்துள்ளது. அவர் கடந்த 12 ஆம் திகதி தாய்லாந்திலிருந்து இலங்கைக்கு விமானத்தில் வந்திருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

## 2026 ஆம் ஆண்டுக்கான விடுமுறைகள் அறிவிப்பு

கொழும்பு, மே 02

2026 ஆம் ஆண்டுக்கான அரச, வங்கி விடுமுறைகள் தொடர்பான பட்டியல் அடங்கிய வர்த்தமானியை அரசாங்கம் வெளியிட்டுள்ளது.

கடந்த 27ஆம்திகதி வர்த்மாானி அறிவித்தல் மூலம் அர சாங்கம் விடுமுறை தொடர் பான விபரங்களை அறிவித்துள்ளது.

பொதுநிர்வாக, மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சர் ஏ.எச்.எம்.எச். அபயரத்ன, 1971 ஆம் ஆண்டின் 29 ஆம் இலக்க விடுமுறை சட்டத்தின் பிரிவு 04 இன் கீழ் இந்த அறிவிப்பை வெளியிட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிரதமர் பதவிக்கு பிமல் பெயரை ஜே. வி. பி. பரிந்துரைத்துள்ளது!

## சொல்கிறார் உதய கம்மன்பில

கொழும்பு, ஜூன் 02

**அமைச்சரவை மறுசீரமைப்பின்போது பிரதமர் பதவிக்கு அமைச்சர் பிமல் ரத்நாயக்கவின் பெயரை ஜே. வி. பி. பரிந்துரைத்துள்ளது. இதற்கு அமைச்சர்களான சுனில் ஹந்துன்நெத்தி, லால் காந்த ஆகியோர் எதிர்ப்பு தெரிவித்துள்ளனர் என்றும் அறிய முடிகிறதென பிவிதுரு ஹெல உறுமய கட்சியின் தலைவர் உதய கம்மன்பில தெரிவித்துள்ளார்.**



காணலிலேயே இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

அவர் மேலும் கூறுகையில், "மக்கள் விடுதலை முன்னணிக்கும் (ஜே. வி. பி.) தேசிய மக்கள் சக்திக்கும் இடையில் முரண்பாடுகள் ஏதுமில்லை. ஆகவே அமைச்சரவையை மறுசீரமைப்பதற்கான அவசியம் கிடையாது என்று கைத்தொழில் அமைச்சர் சுனில் ஹந்துன்நெத்தி குறிப்பிட்டுள்ளார். அரசாங்கம் ஆட்சிக்கு வந்து ஆறு மாதங்கள் நிறைவடைந்துள்ளன. இந்த ஆறு மாத பயிற்சியை அடிப்படையாகக் கொண்டு அமைச்சரவையை கூட்டு விருப்பத்துடன் ரத்நாயக்க குறிப்பிட்டுள்ளார்.

அமைச்சர் பிமல் ரத்நாயக்க சபை முதல்வராக பாராளுமன்றத்தில் செயல்படும்விதம் குறித்து எதிர்க்கட்சிகள் மாத்திரமல்ல பாராளுமன்ற உயர் அதிகாரிகளும் அதிருப்தி வெளிப்படுத்தியுள்ளனர். தான் தோன்றித்தனமான முறையில் செயல்படுவது சபை முதல்வர் பதவிக்கு அழகல்ல, மக்கள் விடுதலை முன்னணிக்கும் தேசிய மக்கள் சக்திக்கும் இடையில் பனிப்போர் தீவிரமடைந்துள்ளது.

இந்த அரசாங்கத்தில் தேசிய மக்கள் சக்தியினர் ஆதிக்கம் கொண்டுள்ளதை மக்கள் விடுதலை முன்னணியின் சிரேஷ்ட உறுப்பினர்கள் எதிர்த்து வருகிறார்கள்.

இவ்வாறான பின்னணியில் தான் அமைச்சரவை மறுசீரமைப்பு குறித்து அவதானம் செலுத்தப்பட்டு, பிரதமர் பதவிக்கு அமைச்சர் பிமல் ரத்நாயக்கவின் பெயர் முன்மொழியப்பட்டுள்ளது.

இதற்கு அமைச்சர்களான சுனில் ஹந்துன்நெத்தி, லால் காந்த ஆகியோர் எதிர்ப்பு தெரிவித்துள்ளார்கள். இதனால்தான் அமைச்சரவை மறுசீரமைப்பு என்பதொன்று இல்லை என்று இவர்கள் கூறுகிறார்கள் - என்றார். (ஐ)

# ஆட்சி அமைப்பதற்காக சலுகை வழங்குவதும் சட்டப்படி குற்றமே!

## ஐக்கிய மக்கள் சக்தி சொல்கிறது



கொழும்பு, ஜூன் 02

இலஞ்ச, ஊழல் சட்டத்துக்கமைய பணம் மாத்திரமின்றி வேறு எந்த வகையிலும் வழங்கப்படும் சலுகைகள், சிறப்புரிமைகள், பதவிகளும் தண்டனைக்குரிய குற்றமாகும். உள்ளூராட்சி மன்றங்களில் ஆட்சியமைப்பதற்கு அரச பதவிகளை அரசாங்கம் பரிந்துரைக்குமாயின், அதுவும் சட்டரீதியில் குற்றமாகும் - இவ்வாறு ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் அஜித் பி பெரேரா சுட்டிக்காட்டினார்.

கொழும்பில் நடத்திய செய்தியாளர் சந்திப்பிலேயே அவர் இதனைக் கூறினார்.

மேலும், உள்ளூராட்சி மன்றங்கள் தேர்தலில் அரசாங்கத்துக்கு காணப்பட்ட மக்கள் ஆணை இல்லாமல் போயுள்ளமை உறுதியாகியுள்ளது. அரசாங்கம் 23 இலட்சம் வாக்குகளை இழந்துள்ளது. பொதுத் தேர்தலில் 60 சதவீதமாகக் காணப்பட்ட மக்கள் ஆணை, உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் 43 சதவீதமாகக் குறைவடைந்துள்ளது.

அரசாங்கத்துக்கு 50 சதவீத வாக்குகள் இல்லாத உள்ளூராட்சி மன்றங்களில், பெரும்பான்மையைப் பெற்றுள்ள தரப்பினருக்கு ஆட்சியமைப்பதற்கு வாய்ப்பளிக்கப்பட வேண்டும்.

2ஆம் திகதி (நாளை) உள்ளூராட்சி மன்றங்களின் பதவிக் காலம் ஆரம்பமாவதாகக் குறிப்பிடப்பட்டுள்ள போதிலும், பதவி நியமனங்கள் உள்ளிட்டவை தொடர்பில் நிச்சயமற்ற தன்மை ஏற்பட்டுள்ளது.

இவ்வாறான நிச்சயமற்ற நிலைமைக்குள் ஊழலுக்கான வாய்ப்புகள் அதிகரித்துள்ளன. பெரும்பான்மை அற்ற உள்ளூராட்சி மன்றங்களில் 50 சதவீதத்தை பெறுவதற்காக அரசியல் கட்சிகள், சுயேச்சை குழுக்களுடன் அரசாங்கம் பேரம் பேசுகிறது.

அது மாத்திரமின்றி பல்வேறு சிறப்புரிமைகளும் அரசாங்கத்தால் பரிந்துரைக்கப்படுகின்றன.

தற்போதுள்ள இலஞ்ச, ஊழல் சட்டத்துக்கமைய பணம் மாத்திரமின்றி வேறு எந்த வகையிலும் வழங்கப்படும் சலுகைகள், சிறப்புரிமைகள், பதவிகளும் தண்டனைக்குரிய குற்றமாகும். அவற்றை வழங்குபவர்களைப் போன்றே பெறுபவர்களும் சட்டத்தின் முன் குற்றவாளிகளாவர் - என்றார். (ஐ)

# ஆஸி. உப பிரதமர் நாளை வருகிறார்!





கொழும்பு, ஜூன் 02

அவுஸ்திரேலிய உப பிரதமரும் பாதுகாப்பு அமைச்சருமான ரிச்சர்ட் மார்லஸ், உத்தியோகப்பூர்வ பயணமாக நாளை இலங்கை வருகிறார்.

இந்தப் பயணத்தில் அவர், ஜனாதிபதி அநுர குமார திஸநாயக்க, பிரதமர் ஹரிணி அமரசூரிய, பிரதி பாதுகாப்பு அமைச்சர் அருணா ஜெயசேகர உள்ளிட்டவர்களை சந்தித்து கலந்துரையாடவுள்ளார் என்றும் தெரிவிக்கப்பட்டது. (ஐ)

# கொத்மலை நீர்த்தேக்கத்தின் வான்கதவு திறக்கப்பட்டது!



கொழும்பு, ஜூன் 02

மேல் கொத்மலை நீர்த்தேக்கத்தின் வான் கதவு ஒன்று திறந்து விடப்பட்டுள்ளது.

மலையக பிரதேசங்களில் பெய்து வரும் கடும் மழையால் அதிகளவு நீர் பாய்வதையடுத்து இந்த வான் கதவு திறக்கப்பட்டுள்ளது.

இதேநேரம் நுவரெலியா பிரதேசத்தில் தொடர்ந்து பெய்து வரும் மழையால வான் கதவுகள் சுயமாக திறக்கப்படலாம். எனவே, நீர்த்தேக்கத்தின் கீழ் வசிப்பவர்கள் அவதானமாக இருக்க வேண்டும் என்று மகாவலி அபிவிருத்தி அதிகார சபையின் பொறியியலாளர்கள் அறிவுறுத்தியுள்ளனர். (ஐ)

# ரூ. 80 இலட்சம் தருவதாகக்கூறி அரசு எம்மிடம் பேரம் பேசியது!

## சஜித் தரப்புக்கு ஆதவளித்த மத்துகம பிரதேச சபை சுயேச்சை உறுப்பினர்!

கொழும்பு, மே 02

"மத்துகம பிரதேச சபையில் ஆட்சிய அமைக்க எம்மிடம் ஆதரவை கோரிய தேசிய மககள் சக்தி அரசாங்கம் 80 இலட்சம் ரூபாயை தருவதாகக் கூறியது. அது மாத்திரமின்றி பல அரசியல் ரீதியான பதவிகளுக்கும் பரிந்துரைக்கப்பட்டன. எனினும், நாம் அதற்கு இணங்கவில்லை", என்று களுத்துறை - மத்துகம பிரதேச சபையின் சுயேச்சை உறுப்பினர் கசுன் முனசிங்க கூறியுள்ளார்.

நேற்று அவர் நடத்திய செய்தியாளர் சந்திப்பிலேயே இதனைத் தெரிவித்தார்.

மேலும், தேர்தலின் பின்னர் ஆளும் தரப்பினருடன் 4 சந்தர்ப்பங்களில் பேச்சுகள் நடைபெற்றன. அந்த பேச்சுகளின்போது தொகுதிக்காக பணம் வழங்குவதற்கும், அரசியல் ரீதியில் பதவிகளை வழங்குவதற்கும் எம்மிடம் பேரம் பேசப்பட்டது. எவ்வாறிருப்பினும் பேச்சின் ஆரம்பம் முதல் இறுதி வரை மத்துகம பிரதேச சபை தலைவர் பதவியை மாத்திரமே நாம் கோரினோம்.

எவ்வாறிருப்பினும் அரசாங்கம் எம்மிடம் பேரம் பேசியதே தவிர, எமது கோரிக்கைக்கு இணங்கவில்லை. எனவேதான் நாம் ஐக்கிய மக்கள் சக்தியுடன் பேச்சுகளை முன்னெடுத்து எமது கோரிக்கைகளை முன்வைத்தோம்.ஐக்கிய மக்கள் சக்தியால் எமது கோரிக்கை ஏற்றுக்கொள் ளப்பட்டுள்ளது. தேசிய மக்கள் சக்தியின் அமைச்சர் ஒருவர் எனது வீட்டுக்கு வருகை தந்து பேச்சு நடத்தினார்.

அது தொடர் பான சி. சி. ரீ. வி. காணொளி என்னிடமிருக்கிறது. அதன் பின்னர் கொழும்பிலும் இரண்டு சுற்று பேச்சுகள் முன்னெடுக்கப் பட்டன. எமது தேவை பணம் அல்ல என்பதால் நாம் தேசிய மக்கள் சக்தி பரிந்துரைத்த சிறப் புரிமைகளை ஏற்றுக்கொள்ளவில்லை - என்றார்.

# அதிசொகுசு கார்களை வைத்திருந்தவர் கைது!

கொழும்பு, ஜூன் 02

போலியான ஆவணங்களை சமர்ப்பித்து இரு அதி சொகுசு கார்களை வைத்திருந்த குற்றச்சாட்டில் இரட்டை பிரஜா உரிமை கொண்ட நபர் கைது செய்யப்பட்டுள்ளார்.

மேல் மாகாண வடக்கு பொலிஸ் குற்றத்தடுப்பு பிரிவு அதிகாரிகளால் கைது செய்யப்பட்ட சந்தேகநபர் கொழும்பு புதுக்கடை நீதிவான் நீதிமன்றில் முற்படுத்தப்பட்டார்.

கொழும்பு - வெள்ளவத்தையை சேர்ந்த 45 வயது நபேர இவ்வாறு கைது செய்யப்பட் டார்.

அவரிடமிருந்து ரேன்ஞ் ரோவர், பென்ஸ் ரக அதி சொகுசு கார்கள் கைப்பற்றப்பட்டன.

இவற்றின் பெறுமதி 16 கோடி ரூபாய்க்கும் அதிகம் என்று மதிப்பிடப்பட்டுள்ளது.

சந்தேகநபரின் கார்கள் இரண்டையும் சோதனைக்காக சுங்கத் திணைக்களத்திடம் ஒப்படைக்குமாறு நீதிமன்றம் உத்தரவு பிறப்பித்துள்ளது.

மேலதிக விசாரணைகளை உதவி பொலிஸ் அத்தியட்சகர் தலைமையிலான குழு முன்னெடுத்து வருகிறது. (ஐ)

# இளைஞன்மீது தாக்குதல் விசாரணைகள் ஆரம்பம்!

## தோட்ட நிர்வாகம் அறிவிப்பு

கொழும்பு, மே 02

கொழும்பு - அவிசாவளையில் தோட்ட இளைஞன்மீது தோட்ட அதிகாரிகள் தாக்குதல் நடத்திய சம்பவம் தொடர்பில் தோட்ட நிர்வாகம் விசாரணைகளை ஆரம்பித்துள்ளது.

இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் தலைவர் செந்தில் தொண்டமானுக்கு, தோட்ட நிர்வாகம் அனுப்பியுள்ள கடிதத்தில் இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

துரதிர்ஷ்டவசமாக இடம்பெற்ற சம்பவம் குறித்து தாம் கவனம் செலுத்தியுள்ளதாகவும் இவ்வாறான சம்பவங்கள் இனி வரும் காலங்களில் இடம்பெறாமல் இருப்பதற்கு உறுதி வழங்குவதாகவும் தோட்ட நிர்வாகம் அந்தக் கடிதத்தில் குறிப்பிட்டுள்ளது.

பாதிக்கப்பட்ட இளைஞனின் குடும்பத்தினர் செந்தில் தொண்டமானின் கவனத்துக்கு இந்த விடயத்தை கொண்டு சென்ற நிலையில், தோட்ட நிர்வாகத்திடம் அவர் விளக்கம் கேட்டிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு



# உகந்தைமலை ஆலய சூழலில் புத்தர் சிலை வைக்கவில்லை!

## கோடீஸ்வரன் எம். பி. சொல்கிறார்

பொத்துவில், ஜூன் 02

**வரலாற்றுப் பிரசித்தி பெற்ற உகந்தைமலை சிறீ முருகன் ஆலயத்துக்குச் சொந்தமான ஏழு ஏக்கர் பரப்பினுள் எந்தவொரு புத்தர் சிலையும் வைக்கப்படவில்லை. யாரும் அலட்டிக் கொள்ளத் தேவையில்லை என்று தமிழ் அரசுக் கட்சியின் அம்பாறை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் கவீந்திரன் கோடீஸ்வரன் தெரிவித்தார்.**

உகந்தைமலையில் கடற்படையினரால் புத்தர் சிலை வைக்கப்பட்ட விவகாரம் ஊடகங்களில் பேசுபொருளாக மாறியுள்ள நிலையில், இது உணர்வுபூர்வமான விடயம். கவனமாக கையாள வேண்டும் என்பதற்காக இதுவரை நான் ஒரு கருத்தும் கூறவில்லை.

நான் அங்கு நேரடியாக சென்றேன்.

அங்கு ஆலய குருக்கள் முதல் வண்ணக்கர் வரை சந்தித்து கலந்துரையாடினேன்.

விளக்கம் கிடைத்தது. அதாவது குறித்த சிலை உகந்தைமலை சூழலில் வைக்கப்படவில்லை.

மாறாக, உகந்தைமலைக்கு அப்பால் கடற்கரைச்சூழலில் உள்ள மலையொன்றில் புத்தர் சிலை நிறுவப்பட்டு ள்ளது. அது அண்மையில் நிறுவப்படவில்லை. பல மாதங்களுக்கு முன்பே நிறுவப்பட்டது.- என்றார்.

(எ)

# கனரக வாகனம் மோதி வயோதிபர் உயிரிழப்பு

திருகோணமலை, ஜூன் 02

திருகோணமலை - கிண்ணியா பொலிஸ் பிரிவின் ஆலங்கேணி பாரதிபுரத்தில் கனரக வாகனம் மோதி 72 வயதுடைய முதியவர் ஒருவர் உயிரிழந்தார்.

இந்த விபத்து சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது துவிச்சக்கர வண்டியில் சென்ற முதியவர் கனரக வாகனத்தில் மோதி படுகாயமடைந்த நிலையில் கிண்ணியா தள மருத்துவமனையில் கடந்த வெள்ளிக்கிழமை சேர்க்கப்பட்டு சிகிச்சை பெற்று வந்த நிலையில் நேற்று முன்தினம் சனிக்கிழமை சிகிச்சை பலனின்றி உயிரிழந்தார்.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை கிண்ணியா பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர். (எ)

# திருக்கோவில் பிரதேச தவிசாளராக சசிகுமார்

திருக்கோவில், ஜூன் 02


திருக்கோவில் பிரதேச சபையின் புதிய தவிசாளராக சுயேச்சை குழுத் தலைவர் சுந்தரலிங்கம் சசிகுமார் நியமிக்கப்பட்டு வர்த்தமானி பிரகடனம் செய்யப்பட்டுள்ளார்.

உதவி தவிசாளராக தங்கராசா வரதராஜன் நியமிக்கப்பட்டுள்ளார்.

அம்பாறை மாவட்ட தமிழ் பிரதேசங்களில் போட்டியின்றி அறுதிப் பெரும்பான்மையுடன் தெரிவான ஒரேயொரு தவிசாளர் திருக்கோவில் பிரதேச சபையின் தவிசாளர் சுந்தரலிங்கம் சசிகுமார் ஆவார்.

வடக்கு - கிழக்கு மாகாணங்களில் தனியொரு சுயேச்சை அணி அறுதிப் பெரும்பான்மையுடன் வெற்றி பெற்று ஆட்சி அமைப்பது திருக்கோவில் பிரதேச சபையில் மாத்திரமேயாகும். (எ- 08)

# மண்டூர் படகுப் பாதையில் கதிர்காம பாதயாத்திரிகர்



மண்டூர், ஜூன் 02

யாழ்ப்பாணம் செல்வச்சந்நிதி முருகன் ஆலயத்திலிருந்து புறப்பட்ட கதிர்காமம் பாதயாத்திரிகர்கள் நேற்று ஞாயிற்றுக்கிழமை 32ஆவது நாளில் குறுமண்வெளி - மண்டூர் படகுப் பாதையூடாக வரலாற்று பிரசித்தி பெற்ற மண்டூர் கந்தசுவாமி ஆலயத்தை சென்றடைந்தனர்.

(எ-08)

# போதைப்பொருள் வியாபாரி கைது!

கல்முனை, ஜூன் 02

அம்பாறை மாவட்டம், சம்மாந்துறை பொலிஸ் பிரிவில் ஐஸ் போதைப்பொருளை விற்பனை செய்த சந்தேகநபர் ஒருவரை கல்முனை விசேட அதிரடிப் படையினர் நேற்று முன்தினம் சனிக்கிழமை கைது செய்துள்ளனர்.

கல்முனை விசேட அதிரடிப் படையினருக்கு கிடைக்கப் பெற்ற தகவலின் அடிப்படையில் மேற்கொள்ளப்பட்ட தேடுதல் மற்றும் பரிசோதனை நடவடிக்கையின் போது 39 வயதுடைய சந்தேக நபர் ஐஸ் போதைப் பொருளுடன் கைது செய்யப்பட்டுள்ளார்.

சந்தேக நபர் நீண்ட காலமாக மிகவும் சூட்சுமமான முறையில் மறைத்து வைத்து ஐஸ் போதைப்பொருட்களை விற்பனை செய்ததுடன், விற்பனைக்காக வைத்திருந்த ஐஸ் போதைப்பொருளையும் கல்முனை விசேட அதிரடிப் படையினர் கைப்பற்றியுள்ளனர்.

இவ்வாறு கைதான சந்தேக நபரிடமிருந்து 3 கிராம் 510 மில்லிகிராம் ஐஸ் போதைப் பொருள் கைப்பற்றப்பட்டதுடன், சந்தேக நபர் உள்ளிட்ட சான்றுப் பொருள்களுடன் சட்ட நடவடிக்கைக்காக சம்மாந்துறை பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப் பட்டுள்ளார்.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளைச் சம்மாந்துறை பொலிஸார் மற்றும் கல்முனை விசேட அதிரடிப் படையினர் மேற்கொண்டு வருகின்றனர். (எ-01)

# கண்ணகை அம்மன் சடங்கு இன்று ஆரம்பம்

காரைதீவு, ஜூன் 02

"வைகாசிப்பொங்கல்" என அழைக்கப்படும் கண்ணகை அம்மனின் வைகாசித் திருக்குளிர்த்திச் சடங்கு இன்று 02ஆம் திகதி திங்கட்கிழமை ஆரம்பமாகின்றது.

இதனால் கண்ணகை அம்மன் ஆலயங்கள் உள்ள கிராமங்கள் புதுப்பொலிவு பெற்றுள்ளதுடன் பக்திமயமாக காட்சியளிக்கின்றன.

கிழக்கில் குறிப்பாக வந்தாறுமூலை, மகிழடித்தீவு, முதலைக்குடா, மட்டக்களப்பு புதுக்குடியிருப்பு, செட்டிப்பாளையம் களுவாஞ்சிக்குடி, மகிழூர், கல்முனை, காரைதீவு, வீரமுனை, பட்டிநகர், தம்பிலுவில் போன்ற கிராமங்கள் விழாக்கோலம் பூண்டுள்ளன.

வீதியிருமருங்கிலும் அம்மனின் படங்களுடன் தோரணம், சோடனைகள், அலங்கார மின் விளக்குகள், மாவிலை, குருத் தோலைகள் என அச்சூழல் காட்சியளிக்கின்றன.

(எ-08)

# ஆசிரியருக்கு கௌரவிப்பு



கல்முனை, ஜூன் 02

கல்முனை மஹ்மூத் மகளிர் கல்லூரியில் ஆசிரியராக கடமையாற்றி இலங்கை ஆசிரியர் கல்வியியலாளர் சேவைக்கு ஆட்சேர்ப்பு செய்யப்பட்டுள்ள குடியியற் கல்வி பாட ஆசிரியரும் சமூக விஞ்ஞான பாடத்துக்கான இணைப்பாளருமாகிய எம். ஏ. அஸ்வரை கௌரவிக்கும் நிகழ்வு கடந்த வெள்ளிக்கிழமை நடைபெற்றது.

(எ)

# சுற்றாடல் தின விழிப்புணர்வு கருத்தரங்கும் ஊர்வலமும்

கல்முனை, ஜூன் 02

சுற்றாடல் தின விழிப்புணர்வு ஊர்வலமும் விழிப்புணர்வு கருத்தரங்கும் கல்முனை நகரில் நடைபெறவுள்ளது.

சுற்றுச்சூழலின் முக்கியத்துவம் கடந்த சில ஆண்டுகளாகவே உலகம் முழுவதிலும் உணரப்படுகின்றது. மனித நடவடிக்கைகளால் சூழலில் ஏற்பட்டு வரும் விரும்பத் தகாத மாற்றங்களும் அதனால் ஏற்படுகின்ற பாதகமான விளைவுகளும் இது தொடர்பாக நடவடிக்கைகளை எடுக்க வேண்டிய கட்டாயத்தை ஏற்படுத்தியுள்ளன. இதனை மையமாக கொண்டு டயகோணியா மற்றும் முஸ்லிம் பெண்கள் ஆராய்ச்சி செயல் முன்னணி என்பனவற்றின் அனுசரணையில் எதிர்வரும் 5 ஆம் திகதி விழிப்பூட்டல் ஊர்வலமும் கருத்தரங்கும் கல்முனையில் நடைபெறவுள்ளது.

கல்முனை இஸ்லாமாபாத் முஸ்லிம் மகா வித்தியாலய அதிபர் ஏ.ஜி.ஏ. ரிஷாத் தலைமையில் நடைபெறவுள்ள இந்த நிகழ்வில் கல்முனை வலயக்கல்வி பணிப்பாளர் சஹ்றூதுல் நஜீம், சுற்றாடல் அதிகார சபை உயர் அதிகாரிகள், கல்முனை வலயக் கல்வி அலுவலக அதிகாரிகள், பொலிஸ் திணைக்கள அதிகாரிகள் என பலரும் கலந்து கொள்ளவுள்ளனர்.

(எ)

# "சுயலாப கட்சி அரசியலை விட்டுவிட்டு சமூகம் சார்பாக செயல்பட வேண்டும்"

திருகோணமலை, ஜூன் 02

உள்ளூராட்சி சபைகளில் ஆட்சியமைப்பில் தமிழ் - முஸ்லிம் தலைவர்கள் தங்கள் சுயலாப கட்சி அரசியலை கைவிட்டு விட்டு சமூகம் சார்பாக செயல்பட வேண்டும் என முன்னாள் பிரதியமைச்சர் அப்துல்லா மஹ்ரூப் தெரிவித்தார்.

திருகோணமலை, கிண்ணியாவில் நேற்று நடைபெற்ற [illegible]

அவர்மேலும் கூறுகையில், காங்கிரஸின் தலைவர் அதாவுல்லா சமூகம் ஒன்றுபட வேண்டிய தேவைகள் பற்றி காலங் கடந்து ஏற்றுக் கொண்டுள்ளார். தற்போதைய சூழ்நிலையில் 30 ஆசனங்களை அம்பாறை மாவட்டத்தில் சிறீலங்கா முஸ்லிம் காங்கிரஸும் 26 ஆசனங்களை மக்கள் காங்கிரஸும் பெற்றுள்ளன.

இந்த நிலையில் முஸ்லிம் சமூகம், தேசிய மக்கள் சக்தி அரசாங்கத்தால் பல உரிமைகளை இழந்திருக்கின்ற நேரத்திலே எங்களுடைய கோரிக்கைகளை அல்லது அபிலாஷைகளை இனவாதமாக, மதவாதமாக ஜனாதிபதியும் அமைச்சர்களும் எடுத்தியம்புவதற்கு சவாலாக நீங்கள் அனைவரும் ஒன்றுபட வேண்டும் என்று கூறிய போது அதனை ஏற்றுக் கொண்டதாக நான் அறியவில்லை.- என்றார்.

(எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நைஜீரியாவில் வெள்ளத்தால் இதுவரை 151 பேர் உயிரிழப்பு



அபுஜா, ஜூன் 02

நைஜீரியாவில் வெள்ளப் பாதிப்புக்குள்ளான 151 பேர் உயிரிழந்தனர்.

நைஜீரியாவின் தலைநகர் அபுஜா நகரிலிருந்து மேற்கே 380 கிலோ மீற்றர் தொலைவில் மொக்வா என்ற நகரம் உள்ளது. வடக்கு மத்திய பகுதியில் நைஜர் மாகாணத்துக்கு உட்பட்ட இந்த நகரம், முக்கிய வர்த்தக மற்றும் போக்குவரத்து நகரங்களில் ஒன்றாகவுள்ளது. இந்த நகரங்களுக்கு நாட்டின் வடக்கு பகுதியில் உள்ள விவசாயிகள் வெங்காயம், பீன்ஸ் உள்ளிட்ட காய்கறிகள் மற்றும் பிற உணவுப் பொருட்களை எடுத்து வந்து விற்பனை செய்வார்கள்.

இவற்றை நாட்டின் தெற்கு பகுதியிலிருந்து வரும் வர்த்தகர்கள் வாங்கி செல்வார்கள். இந்த நிலையில், கடந்த 2 நாட்களாக இந்த பகுதியில் கனமழை பெய்து வருகிறது. இதனால், நகர் முழுவதும் வெள்ளம் சூழ்ந்து காணப்படுகிறது.

இதில் சிக்கி 151 பேர் உயிரிழந்தனர். 11 பேர் காயமடைந்தனர். 3 ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் புலம்பெயர்ந்து சென்றனர். தொடர் மழையால், வெள்ளம் சூழ்ந்து காணப்படுகிறது. ஏறக்குறைய 5 மணிநேரத்தில், வெள்ளம் அதிகரித்து 500இற்கும் மேற்பட்ட வீடுகள் நீரில் மூழ்கின.

இதனால், மக்களை மீட்கும் பணியும் தீவிரப்படுத்தப்பட்டுள்ளது. 2 வீதிகள் வெள்ளத்தில் அடித்துச் செல்லப்பட்டுள்ளன. 2 பாலங்கள் உடைந்துள்ளன.

இதனைத் தொடர்ந்து ஜனாதிபதி போலா தினுபு, பலியானவர்களின் குடும்பத்தினருக்கு இரங்கல் தெரிவித்ததுடன், நிவாரணப் பொருட்களையும் தற்காலிக புகலிடம் வழங்கும் உதவியையும் காலதாமதமின்றி உடனடியாக செய்யும்படி அதிகாரிகளுக்கு உத்தரவிட்டுள்ளார். (எ)

# சூடானில் புதிய வகை கொலரா 10 இலட்சம் பேர் பாதிக்கப்படுவர்

## ஐக்கிய நாடுகள் சபை எச்சரிக்கை

கார்டூம், ஜூன் 02

**சூடானில் பரவும் புதிய வகை கொலரா தொற்றால் 10 இலட்சம் பேர் பாதிக்கப்படுவார்கள் என்று ஐக்கிய நாடுகள் சபை எச்சரிக்கை விடுத்துள்ளது.**

வடக்கு ஆபிரிக்க நாடான சூடானில் இராணுவத்துக்கும் ஆர். எஸ். எவ். எனப்படும் கிளர்ச்சியாளர்களுக்கும் இடையே நீண்ட காலமாக மோதல்போக்கு நிலவுகிறது. இதன் தொடர்ச்சியாக கடந்த 2023ஆம் ஆண்டு உள்நாட்டு போர் வெடித்தது. இதனால், நிலவும் அரசியல் மற்றும் பொருளாதார நெருக்கடியால் அரசாங்கம் திணறுகிறது.

இந்த நிலையில், தற்போது புதிய வகை கொலரா தொற்று தலைவிரித்தாடுகிறது. தலைநகர் கார்டூம் மற்றும் ஓம்டுர்மனில் இந்த பாதிப்பு அதிகம் கண்டறியப்பட்டுள்ளது. மேலும், கோர்டோபான், சென்னார், காசிரா உள்ளிட்ட பல மாகாணங்களில் கொலரா தொற்று வேகம் எடுத்துள்ளது.

இதன்படி கடந்த 6 மாதங்களில் சுமார் 7 ஆயிரத்து 700 பேர் கொலரா தொற்றால் பாதிக்கப்பட்டனர். இவர்களில் பெரும்பாலானோர் 5 வயதுக்கு உட்பட்ட குழந்தைகள் ஆவர். தண்ணீரால் பரவும் இந்த கொலரா தொற்று அதிக வயிற்று வலியை ஏற்படுத்தி உயிரையே பறிக்கும் அபாயம் உடையது.

ஏற்கனவே நிலவும் உள்நாட்டுப் போருக்கு மத்தியில் கொலரா தொற்றும் வேகமெடுத்ததால் அரசாங்கத்துக்கு பெரும் நெருக்கடி ஏற்பட்டுள்ளது. இதன் காரணமாக கடந்த ஒரு வாரத்தில் மட்டும் 172 பேர் கொலரா தொற்றுக்குப் பலியாகினர்.

நிலைமை கைமீறிப் போனதால் அங்கு சுமார் 10 இலட்சம் பேர் கொலராவால் பாதிக்கப்பட வாய்ப்பு உள்ளதாக ஐ. நா. எச்சரிக்கை விடுத்துள்ளது. எனவே, நிலைமையை உன்னிப்பாக கவனித்து வருவதாக சுகாதாரத்துறை அமைச்சர் ஹைதம் இப்ராஹிம் தெரிவித்துள்ளார். (எ)

# கல் குவாரி விபத்தில் 14 பேர் பலி

ஜகார்த்தா, ஜூன் 02

இந்தோனேஷியாவில் கல் குவாரி விபத்தில் பலி எண்ணிக்கை 14 ஆக அதிகரித்தது.

இந்தோனேஷியாவின் ஜாவா மாகாணத்தின் சிரேபன் நகரத்தில் சுண்ணாம்புக் கல் குவாரி ஒன்று செயல்பட்டு வருகிறது.

இங்கு தொழிலாளர்கள் பலர் பணியில் ஈடுபட்டிருந்தனர்.

நேற்று முன்தினம் காலை 09. 30 மணியளவில் பாறைகள் சரிந்து விபத்து ஏற்பட்டது. அப்போது, அங்கு பணியாற்றிய தொழி லாளர்கள் மற்றும் ஏராளமான இயந்திரங்கள் புதைந்தன.

இந்தச் சம்பவத்தில் 14 தொழிலாளர்கள் பலியான நிலையில் ஏராளமானோர் படுகாயமடைந்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (எ)

# ரயில் கவிழ்ந்து விபத்து ரஷ்யாவில் 7 பேர் பலி!

## சதிச்செயலா? என விசாரணை

மொஸ்கோ, ஜூன் 02

ரஷ்யாவில் ரயில் கவிழ்ந்து விபத்துக்குள்ளானதில் 7 பேர் பலியாகினர். இது சதிச்செயலா? என விசாரணை நடத்தப்பட்டு வருகிறது.

ரஷ்யாவின் பிரியங்ஸ் மாகாணம் கில்முவ் நகரிலிருந்து தலைநகர் மொஸ்கோவுக்கு நேற்று முன்தினம் இரவு எக்ஸ்பிரஸ் ரயில் புறப்பட்டது. அந்த ரயிலில் நூற்றுக்கணக்கான பயணிகள் பயணித்தனர்.


இந்த நிலையில், பிரியங்ஸ் மாகாணம் யொஹோனிசி என்ற கிராமம் அருகே சென்றுகொண்டிருந்தபோது தண்டவாளத்தின் மேல் அமைக்கப்பட்டிருந்த மேம்பாலம் இடிந்து விழுந்தது. இந்த மேம்பாலத்தின் இடிபாடுகள், கொன்கிரீட் கற்கள் தண்டவாளத்தில் விழுந்தன. குண்டு வைத்து மேம்பாலம் தகர்க்கப்பட்டதாக தகவல் வெளியானது.

அப்போது, அந்த தண்டவாளத்தில் வேகமாக வந்த எக்ஸ்பிரஸ் ரயில் இடிபாடுகள், கொன்கிரீட் கற்கள் மீது மோதியது. இதில், ரயில் கவிழ்ந்து விபத்துக்குள்ளானது. இந்த விபத்தில் ரயிலில் பயணித்த 7 பேர் உயிரிழந்தனர். மேலும், 30 பேர் படுகாயமடைந்தனர்.

தகவலறிந்து விரைந்து வந்த மீட்புக்குழுவினர் படுகாயமடைந்தவர்களை மீட்டு அருகில் உள்ள மருத்துவமனையில் சேர்த்தனர். மேம்பாலம் குண்டு வைத்து தகர்க்கப்பட்டதாக தகவல் வெளியான நிலையில் இது சதிச்செயலாக இருக்கலாம் என்று அதிகாரிகள் சந்தேகம் வெளியிட்டுள்ளனர். விபத்து நடந்த பகுதி உக்ரைனுக்கு அருகே உள்ள பகுதியாகும். இதனால், இந்தச் சம்பவத்தில் உக்ரைன் சதிச்செயல் இருக்கலாம் என்று ரஷ்ய அதிகாரிகள் சந்தேகம் எழுப்பியுள்ளனர். (எ)

# 25 கோடி தேனீக்கள் தப்பியதால் பதற்றம்

## பொதுமக்களுக்கு எச்சரிக்கை



வாஷிங்டன், ஜூன் 02

அமெரிக்காவில் விபத்துக்குள்ளான கனரக வாகனத்திலிருந்து 25 கோடி தேனீக்கள் தப்பி பறந்து சென்றன.

அமெரிக்காவின் வாஷிங்டன் மாகாண நெடுஞ்சாலையில் நேற்று முன்தினம் மாலை ஒரு லொறி சென்று கொண்டிருந்தது. தேனீ பண்ணைக்குச் சொந்தமான வாகனத்திலிருந்து 25 கோடிக்கும் அதிகமான வளர்ப்பு தேனீக்கள் கொண்டு செல்லப்பட்டன. கனடா எல்லையில் உள்ள வாங்டாம் அருகே சென்றபோது அந்த வாகனம் சாரதியின் கட்டுப்பாட்டை இழந்தது. இதனால் நிலைதடுமாறி வீதியோரம் இருந்த பள்ளத்தில் கவிழ்ந்தது.

இதனால் பெட்டிக்குள் அடைத்து வைக்கப்பட்டிருந்த தேனீக்கள் தப்பி பறந்து சென்றன. இதனையடுத்து அந்த வீதி மூடப்பட்டு போக்குவரத்து துண்டிக்கப்பட்டது. இதன் காரணமாக அங்கு வசிக்கும் மக்கள் கவனமாக இருக்குமாறு உள்ளூர் நிர்வாகம் எச்சரிக்கை விடுத்துள்ளது.


# ஏவுகணை களஞ்சியத்தின் மீது இஸ்ரேல் இராணுவம் தாக்குதல்

டெல் அவிவ், ஜூன் 02

சிரியாவில் ஏவுகணை களஞ்சியம் மீது இஸ்ரேல் இராணுவம் வான்வெளி தாக்குதல் நடத்தியுள்ளது.

இந்த நிலையில், சிரியாவின் லடாகியா பகுதியில் உள்ள ஏவுகணை கிடங்குகள் மீது இஸ்ரேல் பாதுகாப்புப் படைகள் நேற்று திடீரென வான்வெளி தாக்குதல் நடத்தின. மத்திய தரைக்கடல் பகுதியில் அமைந்த இடத்தில் இடம்பெற்ற இந்தத் தாக்குதலில் ஒருவர் பலியானார்.

சர்வதேச நாடுகள் மற்றும் இஸ்ரேல் நாட்டின் சுதந்திர இயக்கத்துக்கு அச்சுறுத்தலாக இருக்கக் கூடிய ஏவுகணைகள் இந்த பகுதியில் சேமிக்கப்பட்டுள்ளன எனக்



கூறப்படுகிறது. நிலப்பரப்பிலிருந்து வான்வெளியில் ஏவுகணைகளை தாக்கி அழிக்கும் ஏவுகணைகளும் இருந்தன.

இந்தப் பகுதியில், சுதந்திரம் பாதுகாக்கப்பட வேண்டும் என்பதற்காக இஸ்ரேல் பாதுகாப்பு படைகள் தொடர்ந்து தன்னுடைய வேலையை செய்யும். இஸ்ரேலுக்கும் அதன் குடிமக்களுக்கும் ஏற்படக் கூடிய எந்தவித அச்சுறுத்தலையும் ஒழிப்பதற்கான பணியில் இஸ்ரேல் ஈடுபடும் என இஸ்ரேல் படைகள் சார்பில் வெளியிடப்பட்ட அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிரெஞ்ச் ஓபின் ரென்னிஸ்: ஜோகோவிச் அபார வெற்றி




பாரிஸ், ஜூன் 02

பிரெஞ்ச் ஓபின் ரென்னிஸ் போட்டியில் அபார வெற்றி பெற்ற நோவக் ஜோகோவிச் 4ஆவது சுற்றுக்கு முன்னேறினார்.

"கிராண்ட்ஸ்லாம்" போட்டிகளில் ஒன்றான பிரெஞ்ச் ஓபின் ரென்னிஸ் தொடர் பாரிஸில் நடைபெற்று வருகிறது. இதில், நேற்று நடைபெற்ற ஆண்கள் ஒற்றையர் பிரிவின் 3ஆவது சுற்று ஆட்டம் ஒன்றில் முன்னணி வீரரான செர்பியாவின் நோவக் ஜோகோவிச், ஆஸ்திரியாவின் பிலிப் மிசோலிக் உடன் மோதினார்.

இந்தப் போட்டியில் தொடக்கம் முதலே ஆதிக்கம் செலுத்திய ஜோகோவிச் 6-3, 6-4, 6-2 என்ற நேர் செற் கணக்கில் பிலிப் மிசோலிக்கை வீழ்த்தி 4ஆவது சுற்றுக்கு முன்னேறினார். இன்று நடைபெறும் 4ஆவது சுற்று ஆட்டத்தில் ஜோகோவிச், பிரிட்டனின் கமரூன் நோரியுடன் மோதவுள்ளார். (எ)

## சூர்யகுமார் சாதனை



முல்லன்பூர், ஜூன் 03

ஐ. பி. எல். தொடரில் சூர்யகுமார் யாதவ் புதிய சாதனை படைத்துள்ளார்.

ஐ.பி. எல். நடப்பு தொடரில் முல்லன்பூரில் கடந்த 30 ஆம் திகதி நடைபெற்ற வெளியேற்றுதல் சுற்று ஆட்டத்தில் மும்பை இந்தியன்ஸ் - குஜராத் டைட்டன்ஸ் அணிகள் மோதின. இதில், முதலில் துடுப்பெடுத்தாடிய மும்பை 20 ஓவர்களில் 5 விக்கெட்களை மட்டும் இழந்து 228 ஓட்டங்கள் குவித்தது. மும்பை தரப்பில் அதிகபட்சமாக ரோஹித் சர்மா 81 ஓட்டங்கள் எடுத்தார். குஜராத் தரப்பில் பிரசித் கிருஷ்ணா, சாய் கிஷோர் தலா 2 விக்கெட்கள் வீழ்த்தினர். தொடர்ந்து 229 ஓட்டங்கள் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் துடுப்பெடுத்தாடிய குஜராத் அணி 20 ஓவர்களில் 6 விக்கெட்களை இழந்து 208 ஓட்டங்கள் மட்டுமே எடுத்தது. இதன் மூலம் 20 ஓட்டங்கள் வித்தியாசத்தில் மும்பை அணி வெற்றி பெற்றது. குஜராத் டைட்டன்ஸ் தரப்பில் அதிகபட்சமாக சாய் சுதர்சன் 80 ஓட்டங்கள் எடுத்தார். இந்த வெற்றியின் மூலம் மும்பை அணி இறுதிப்போட்டிக்கு முன்னேறுவதற்கான தகுதி சுற்று 2இற்கு முன்னேறியது. தோல்வி கண்ட குஜராத் தொடரிலிருந்து வெளியேறியது.

இந்த போட்டியில் மும்பை வீரர் சூர்யகுமார் யாதவ் 33 ஓட்டங்கள் குவித்தார். இதனால் சூர்யகுமார் யாதவ் புதிய சாதனை படைத்துள்ளார்.

ரி - 20 கிரிக்கெட் வரலாற்றில் தொடர்ச்சியாக 15 போட்டிகளில் 25இற்கும் மேற்பட்ட ஓட்டங்கள் குவித்த ஒரே வீரர் என்ற பெருமையை பெற்றார் சூர்யகுமார். நடப்பு சீசனில் அவர் விளையாடிய 15 போட்டிகளிலும் 25இற்கும் மேற்பட்ட ஓட்டங்களை குவித்து சூர்யகுமார் யாதவ் அசத்தியுள்ளார். (எ)

## ஐ. பி. எல். கிரிக்கெட் தொடரில் ரஷித் கான் மோசமான சாதனை

முல்லன்பூர், ஜூன் 02

ஐ. பி. எல். தொடரில் முல்லன்பூரில் நடைபெற்ற வெளியேற்றுதல் சுற்று ஆட்டத்தில் மும்பை இந்தியன்ஸ் - குஜராத் டைட்டன்ஸ் அணிகள் மோதின.

இந்த ஆட்டத்தில் குஜராத் சுழற்பந்து வீச்சாளர் ரஷித் கான் 4 ஓவர்கள் பந்து வீசி 2 சிக்ஸருடன் 31 ஓட்டங்கள் விட்டுக்கொடுத்தார்.

நடப்பு தொடரில் அவர் இதுவரை 33 சிக்ஸர்களை வாரி வழங்கியிருக்கிறார். இதன் மூலம் ஐ.பி.எல். போட்டியில் ஒரு சீசனில் அதிக சிக்ஸர்களை விட்டுக்கொடுத்த வீரர் என்ற மோசமான சாதனைக்கு ரஷித் கான் சொந்தக்காரர் ஆனார். இதற்கு முன்பு 2022ஆம் ஆண்டு முகமது சிராஜ் தனது பந்து வீச்சில் 31 சிக்ஸர் வழங்கியதே அதிகபட்சமாக இருந்தது. (எ)

## உலக டெஸ்ட் சம்பியன்ஷிப் இறுதிப்போட்டி 11ஆம் திகதி

டுபாய், ஜூன் 02

ஐ. சி. சி. உலக டெஸ்ட் சம்பியன்ஷிப் தொடரின் இறுதிப்போட்டி லண்டன் லோர்ட்ஸ் மைதானத்தில் எதிர்வரும் 11ஆம் திகதி முதல் 15ஆம் திகதி வரை நடைபெறவுள்ளது. இந்தப் போட்டியில் அவுஸ்திரேலியா - தென்னாபிரிக்கா அணிகள் மோதவுள்ளன. இந்தப் போட்டியில் நடப்பு சம்பியனான அவுஸ்திரேலியா வெற்றி பெற அதிக வாய்ப்புள்ளதாக பலரும் கூறிவருகின்றனர்.

ஏனெனில் அந்த அணியில் வேகப்பந்துவீச்சு துறை தென்னாபிரிக்காவை விட வலுவானதாகவுள்ளது. இருப்பினும் அவுஸ்திரேலியாவை வீழ்த்துவோம் என்று தென்னாபிரிக்க வேகப்பந்து வீச்சாளர் ககிசோ ரபாடா சவால் விடுத்துள்ளார். இந்த போட்டிக்கான இரு அணிகளும் ஏற்கனவே அறிவிக்கப்பட்டுள்ளன.

இந்த நிலையில், இப்போட்டிக்கு முன்னதாக தென்னாபிரிக்க வீரர்கள் பயிற்சி பெறும் வகையில் சிம்பாவே அணிக்கு எதிராக 4 நாள் டெஸ்ட் போட்டியில் விளையாடவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. இதன்படி இவ்விரு அணிகளுக்கும் இடையேயான இந்தப் போட்டி நாளை 3ஆம் திகதி சசெக்ஸில் நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

சிம்பாவே அணி தற்போது இங்கிலாந்தில் உள்ள நிலையில், தென்னாபிரிக்க அணி, சிம்பாவேயுடன் பயிற்சி போட்டியில் விளையாடத் திட்டமிட்டுள்ளது. (எ)

## ஜேமி ஓவர்டான் விலகல்




லண்டன், ஜூன் 02

இங்கிலாந்து அணியின் சகலதுறை வீரர் ஜேமி ஓவர்டான் விலகியுள்ளார்.

மேற்கு இந்திய தீவுகள் கிரிக்கெட் அணி இங்கிலாந்தில் சுற்றுப்பயணம் மேற்கொண்டு 3 போட்டிகள் கொண்ட ஒருநாள் தொடரில் விளையாடி வருகிறது. இதில் நடைபெற்ற முதல் ஒருநாள் போட்டியில் இங்கிலாந்து வெற்றி பெற்று தொடரில் 1-0 என்ற கணக்கில் முன்னிலை பெற்றுள்ளது.

இதனையடுத்து இவ்விரு அணிகள் இடையிலான 2ஆவது போட்டி நேற்றும் 3ஆவது மற்றும் கடைசி ஒருநாள் போட்டி நாளை 3ஆம் திகதியும் நடைபெறுகிறது.

இந்த நிலையில், மேற்கு இந்திய தீவுகள் அணிக்கு எதிரான ஒருநாள் தொடரின் எஞ்சிய போட்டிகளிலிருந்து இங்கிலாந்து அணியின் சகலதுறை வீரர் ஜேமி ஓவர்டான் விலகியுள்ளார். முதல் போட்டியில் விளையாடி 3 விக்கெட்கள் வீழ்த்திய அவர், வலது சுண்டு விரலில் ஏற்பட்ட எலும்பு முறிவு காரணமாக எஞ்சிய தொடரிலிருந்து விலகியுள்ளார். இவருக்கான மாற்று வீரர் அறிவிக்கப்படவில்லை. (எ)

## பிரெஞ்ச் ஓபின் ரென்னிஸ்: கோகோ காப் ஆதிக்கம்



பாரிஸ், ஜூன் 02

பிரெஞ்ச் ஓபின் ரென்னிஸ் போட்டியில் கோகோ காப் வெற்றி பெற்றார்.

"கிராண்ட்ஸ்லாம்" போட்டிகளில் ஒன்றான பிரெஞ்ச் ஓபின் ரென்னிஸ் தொடர் பாரிஸில் நடைபெற்று வருகிறது. இதில் நேற்று நடைபெற்ற மகளிர் ஒற்றையர் பிரிவின் 3ஆவது சுற்று ஆட்டம் ஒன்றில் முன்னணி வீராங்கனையான அமெரிக்காவின் கோகோ காப், செக் குடியரசின் மேரி பௌஸ்கோவா உடன் மோதினார்.

இந்தப் போட்டியில் தொடக்கம் முதலே ஆதிக்கம் செலுத்திய கோகோ காப் 6-1, 7-6 (7-3) என்ற செற் கணக்கில் மேரி பௌஸ்கோவாவை வீழ்த்தி 4ஆவது சுற்றுக்கு முன்னேறினார்.

நாளை நடைபெறும் 4ஆவது சுற்று ஆட்டத்தில் கோகோ காப், ரஷ்யாவின் எகடெரினா அலெக்ஸாண்ட்ரோவா உடன் மோதவுள்ளார். (எ)

## சிங்கப்பூர் ஓப்பின் பட்மிண்டன் சாத்விக் -சிராக் ஜோடி தோல்வி

சிங்கப்பூர், ஜூன் 02

சிங்கப்பூர் ஓபின் பட்மிண்டன் தொடரின் அரையிறுதி போட்டியில் சாத்விக் - சிராக் ஜோடி தோல்வியடைந்தது.

சிங்கப்பூர் ஓபின் சர்வதேச பட்மிண்டன் போட்டி தொடர் சிங்கப்பூர் விளையாட்டு அரங்கில் நடைபெற்று வருகிறது. இதில் ஆண்கள் இரட்டையர் பிரிவில் நேற்று நடைபெற்ற அரையிறுதி ஆட்டம் ஒன்றில் இந்தியாவின் சாத்விக் -சிராக் ஜோடி, மலேசியாவின் சோ வூய் யிக் - ஆரோன் சியா ஜோடியுடன் மோதியது.

இந்தப் போட்டியின் முதல் செற்றை 21-19 என்ற புள்ளிக்கணக்கில் கைப்பற்றிய சாத்வித் - சிராக் ஜோடி, ஆட்டத்தின் அடுத்த இரு செற்களை 10-21, 18-21 என்ற புள்ளிக்கணக்கில் இழந்தது.

இதன் மூலம் 19-21, 21-10, 21-18 என்ற புள்ளிக்கணக்கில் சாத்வித் - சிராக் ஜோடியை வீழ்த்தி மலேசியாவின் சோ வூய் யிக் - ஆரோன் சியா ஜோடி இறுதிப்போட்டிக்கு முன்னேறியது. (எ)

## பிரெஞ்ச் ஓப்பின் ரென்னிஸ் ஸ்வேரெவ் முன்னேற்றம்



பாரிஸ், ஜூன் 02

பிரெஞ்ச் ஓபின் ரென்னிஸ் தொடர் போட்டியில் ஸ்வேரெவ் 4ஆவது சுற்றுக்கு முன்னேறியுள்ளார்.

"கிராண்ட்ஸ்லாம்" போட்டிகளில் ஒன்றான பிரெஞ்ச் ஓபின் ரென்னிஸ் தொடர் பாரிஸில் நடைபெற்று வருகிறது. இதில் நேற்று முன்தினம் நடைபெற்ற ஆண்கள் ஒற்றையர் பிரிவின் 3ஆவது சுற்று ஆட்டம் ஒன்றில் முன்னணி வீரரான ஜேர்மனியின் அலெக்சாண்டர் ஸ்வேரெவ், இத்தாலியின் பிளாவியோ கோபோலியுடன் மோதினார்.

இந்தப் போட்டியில் தொடக்கம் முதலே ஆதிக்கம் செலுத்திய ஸ்வேரெவ் 6-2, 7-6 (7-4), 6-1 என்ற செற் கணக்கில் பிளாவியோ கோபோலியை வீழ்த்தி 4ஆவது சுற்றுக்கு முன்னேறினார்.

இன்று நடைபெறும் 4ஆவது சுற்று ஆட்டத்தில் அலெக்சாண்டர் ஸ்வேரெவ், நெதர்லாந்தின் டாலன் கிரீக்ஸ்பூர் உடன் மோதவுள்ளார். (எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தாமரை இலை...

இராஜசேகர் நிசாந்தன் ஆகியோரே உயிரிழந்தனர்.

கிராம மக்களின் தேடுதலில் இருவரும் மீட்கப்பட்டு, முல்லைத்தீவு பொது மருத்துவமனையில் சேர்க்கப்பட்டனர். அவர்களை பரிசோதித்த மருத்துவர்கள் இருவரும் ஏற்கனவே உயிரிழந்து விட்டனர் என்று தெரிவித்தனர்.

இருவரின் உடல்களும் பிரேத பரிசோதனைக்காக மருத்துவமனையின் பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளன.

முல்லைத்தீவு பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர். (ஐ)

## வடக்கு...

பிரதேச சபையின் தவிசாளராக வே. கரிகாலன், உபதவிசாளராக சு. பரந்தாமன் ஆகியோர் குறிப்பிடப்பட் டுள்ள னர்.

மட்டக்களப்பு மாவட்டத்தின் மண்முனைபற்று பிரதேச சபையின் தவிசாளராக த. கோபாலபிள்ளை, உபதவிசாளராக த. டிஷாந்த், போரதீவு பற்று பிரதேச சபையின் தவிசாளராக வி. மதிமேனன், உபதவிசாளராக த. கயசீலன் ஆகியோர் பெயரிடப்பட்டுள்ளனர்.

அம்பாறை மாவட்டத்தின் திருக்கோவில் பிரதேச சபையின் தவிசாளராக சு. சசிகுமார், உபதவிசாளராக த. வரதராஜன் நியமிக்கப்பட்டுள்ளனர்.

திருகோணமலை மாவட்டத்தின் வெருகல் பிரதேச சபையின் தலைவராக செ. கருணாநிதி, உபதவிசாளராக கா. மாணிக்கவாசகன் ஆகியோர் பெயரிடப்பட்டுள்ளனர். (ஐ)

## ஓமந்தை...

யாழ்ப்பாணம் இந்திய துணைத் தூதரக அதிகாரியான சச்சிதானந்த குருக்கள் பிரபாகர சர்மா குடும்பத்தாருடன் தனிப்பட்ட பயணமாக இந்தியா சென்று திரும்பியிருந்தார். கட்டுநாயக்காவிலிருந்து காரில் அவர்கள் யாழ்ப்பாணம் திரும்பிக் கொண்டிருந்த போது, வவுனியா - ஓமந்தையில் கார் டிப்பருடன் மோதி விபத்து ஏற்பட்டது.

இதில், காரை செலுத்தி வந்த பிரபாகர சர்மா சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார். அவரின் மகன், மனைவி, மாமானார் ஆகியோர் காயமடைந்து மருத்துவமனையில் சேர்க்கப்பட்டிருந்தனர். இந்த நிலையிலேயே காயமடைந்த பிரபாகர சர்மா அக்ஷய் நேற்றிரவு உயிரிழந்தார். (ஐ)


## ஐ.நா....

தெரியவருகிறது.

ஐ. நா. மனித உரிமைகள் ஆணையாளர் இலங்கை வருவதற்கு அரசாங்கம் அனுமதி வழங்கியுள்ளது. இந்த நிலையில், 9 வருடங்களின் பின்னர் மனித உரிமைகள் ஆணையாளர் ஒருவர் நாட்டுக்கு வருகை தரவுள்ளார். முன்னதாக, கடந்த 2016 பெப்ரவரியில் அப்போதைய மனித உரிமைகள் ஆணையாளர் செய்யீத் அல்-ஹூசைன் இலங்கைக்கு வருகை தந்திருந்தார்.

பொறுப்புக்கூறலில் காணப்படும் இடைவெளியை நிரப்பவும், நல்லிணக்கத்தை நோக்கி முன்னேறவும் அரசாங்கம் நடவடிக்கைகளை எடுக்க வேண்டும். பயங்கரவாத தடை சட்ட பயன்பாட்டை உடனடியாக நிறுத்தவேண்டும் என்றும் சர்வதேசம் முன்வைத்துள்ள மனித உரிமைகள் கரிசனைகள் விடயத்திலும் இலங்கை தடுமாற்றத்தை எதிர்கொண்டுள்ளது. அத்துடன், போர் காலத்தில் இடம்பெற்ற மனித உரிமைகள் மீறல், மனித குலத்துக்கு எதிரான நடவடிக்கைகள் தொடர்பில் ஆணையாளரின் பணிமனை உருவாக்கிய பொறுப்புக்கூறல் திட்டத்துக்கு அரசாங்கம் கடும் எதிர்ப்பு தெரிவித்து வருகிறது. இந்த நிலையிலேயே ஐ. நா. மனித உரிமைகள் ஆணையாளர் வோல்கர் டர்க் இலங்கை வருகிறார் என்பதும் குறிப்பிடத்தக்கது. (ஐ)

# ஐ. த. தே. கூட்டணி, முன்னணியின் தலைவர்கள் நேற்று சந்தித்து பேச்சு





யாழ்ப்பாணம், ஜூன் 02

தமிழ்த் தேசிய மக்கள் முன்னணிக்கும், ஜனநாயக தமிழ்த் தேசிய கூட்டணிக்கும் இடையிலான சந்திப்பு நேற்று ஞாயிற்றுக்கிழமை இரவு நடைபெற்றது.

யாழ்ப்பாணத்தில் உள்ள தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலத்தில் இல்லத்தில் இந்த சந்திப்பு நடைபெற்றது.

சந்திப்பில், தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி சார்பில் தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம், பொதுச் செயலாளர் செல்வராசா கஜேந்திரன், ஜனநாயக தமிழ் தேசிய கூட்டணியின் சார்பில் இணைத் தலைவர்களான தர்மலிங்கம் சித்தார்த்தன், சுரேஷ் பிரேமச்சந்திரன், வடக்கு மாகாண சபை முன்னாள் உறுப்பினர் பாலச்சந்திரன் கஜதீபன் ஆகியோர் கலந்துகொண்டிருந்தனர். (ஐ)

## விசாரணைகளில்...

வருவதிலும், மற்றவர்கள்மீது வழக் குத் தொடரப்படுவதைப் போலவே முன்னுரிமை அளிக்கப்பட வேண்டும் என்பதை நினைவூட்ட விரும்புகிறோம்," என்றார். (ஐ)

## உதவிபெற...

தெரிவித்துள்ளது.

உணவுப் பொருட்களை பெறச் சென்றவர்கள்மீது இஸ்ரேல் இராணுவத்தின் டாங்கிகள் நடத்திய தாக்குதலிலேயே இவர்கள் கொல்லப்பட்டனர் என்று ஹமாஸ் அமைப்பு கூறுகிறது.

எனினும், இதனை இஸ்ரேல் அரசாங்கம் மறுத்துள்ளது. இது, ஹமாஸ் அமைப்பின் புனைவு என்றும் அது குறிப்பிட்டுள்ளது. (ஐ)

## யாழ்.மாநகர...

வழங்கப்பட்டுள்ளது. இதன்மூலம் அவர் யாழ். மாநகர சபை உறுப்பினராக தெரிவாகியுள்ளார்.

ஆசிரியையான பாத்திமா றிஸ்லாவின் உறுப்புரிமை நேற்று முன்தினம் வெளியான வர்த்தமானி மூலம் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. (ஐ)

## ஒளிப்படம்...

சம்பவத்தில், 15 வயதான ச. ரஸ்மிலா, ர. கிருசிகா ஆகியோரே உயிரிழந்த னர்.

சம்பவம் தொடர்பில் மேலும் அறிய வருபவை வருமாறு,

முள்ளியவளை பாடசாலை ஒன்றில் கல்வி கற்றுவரும் 3 மாணவிகள் நேற்று மதியவேளை கொட்டுக்கிணற்று பிள்ளையார் ஆலய கேணிக்கு சென்றுள்ளனர். மூவரும் தங்களுக்குள் மாறிமாறி கைபேசியில் படங்களை எடுத்துள்ளனர்.

இருவர் கேணிக்குள் நிற்க மற்றையவர் அவர்களை படம் எடுத்துள்ளார். இதன்போது, அவர்கள் இருவரும் தடுமாறி தண்ணீரில் விழுந்துள்ளனர். படம் எடுத்தவர் அவர்களை காப்பாற்ற முயன்று, முடியாத நிலையில் அயலவர்களை உதவிக்கு அழைத்துள்ளார்.

அவர்கள், இருவரையும் மீட்டு, முல்லைத்தீவு பொது மருத்துவமனையில் சேர்ப்பித்தனர். அவர்கள் இருவரும் ஏற்கனவே உயிரிழந்து விட்டனர் என்று மருத்துவர்கள் தெரிவித்தனர். இருவரின் உடலங்களும் பிரேத பரிசோதனைக்காக மருத்துவமனையில் வைக்கப்பட்டுள்ளன.

சம்பவம் தொடர்பில் முல்லைத்தீவு பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர். (ஐ)

# சுகாதாரமற்ற வகையில் இயங்கிய வர்த்தக நிலையங்களுக்கு அபராதம்

புதுக்குடியிருப்பு, ஜூன் 02

முல்லைத்தீவு, புதுக்குடியிருப்பு இரணைப்பாலை பகுதிகளில் சுகாதாரமற்ற வகையில் இயங்கிய வர்த்தக நிலையங்களுக்கு எதிராக கடந்த வெள்ளிக்கிழமை நீதிமன்றால் தண்டப்பணம் விதிக்கப்பட்டு கடுமையான எச்சரிக்கையும் விடுக்கப்பட்டுள்ளது.

குறித்த வர்த்தக நிலையங்கள் பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்ட போது காலாவதியான உணவுப் பொருட்கள் கைப்பற்றப்பட்டிருந்தன.

இதனையடுத்து குறித்த வர்த்தக நிலையங்களின் உரிமையாளர்கள் முல்லைத்தீவு மாவட்ட நீதிமன்றத்தில் முற்படுத்தப்பட்டிருந்தனர்.

இதன்போது விசாரணை செய்த நீதிபதி 7500 ரூபாய் அபராதம் விதித்ததுடன் வர்த்தகர்களுக்கு கடுமையான எச்சரிக்கையும் வழங்கியிருந்தார்.

அத்துடன் இரணைப்பாலை பகுதியில் பிளாஸ்ரிக் பொருட்கள், சொப்பின் பைகள் மற்றும் ஏனைய கழிவுப் பொருட்கள் வீதியோரங்களில், வாய்க்கால்களில் வீசிய வர்த்தகர்களுக்கு எதிராகவும் வழக்குத்தாக்கல் செய்யப்பட்டிருந்தது.

இதனை விசாரணை செய்த நீதிபதி குறித்த வர்த்தகருக்கு எதிராக 25,000 ரூபாய் தண்டப்பணம் விதித்து தீர்ப்பளித்ததுடன் கடுமையான எச்சரிக்கையும் விடுத்திருந்தார்.

குறித்த சோதனை நடவடிக்கையில் கோம்பாவில் சுகாதார பரிசோதகர் ஆ. சுரேஸ் ஆனந்தன், புதுக்குடியிருப்பு பொதுச் சுகாதார பரிசோதகர் கோகுலன் ஆகியோர் இணைந்து நடவடிக்கையை மேற்கொண்டிருந்தனர்.

அத்துடன் புதுக்குடியிருப்பு நகரப் பகுதிகளிலும் பொதுச் சுகாதார பரிசோதகர்கள் தொடர்ச்சியான முறையில் சோதனை நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றனர். (எ)

# கோழிகளுக்கு விஷம் வைத்த விஷமிகளால் வாழ்வாதாரத்தை இழந்து தவிக்கும் குடும்பம்!

யாழ்ப்பாணம், ஜூன் 02

பெண் தலைமைத்துவ குடும்பம் ஒன்று வாழ்வாதாரத்துக்காக வளர்த்து வந்த கோழிகள் விஷம் வைத்துக் கொல்லப்பட்டன.

கூட்டில் அடைத்து வைக்கப்பட்டிருந்த முட்டையிடும் கோழிகளுக்கே இவ்வாறு விஷம் வைக்கப்பட்டது. இது குறித்து அச்சுவேலி பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு ஒன்றும் பதிவு செய்யப்பட்டது.

வளலாய் மேற்கு, அச்சுவேலி (ஜே/284) பகுதியில் வசித்து வந்த பெண் தலைமைத்துவ குடும்பத்தின் வாழ்வாதரமே இவ்வாறு நாசம் செய்யப்பட்டுள்ளது.

நேற்று ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்ற இந்த சம்பவத்தால் 97 கோழிகள் உயிரிழந்தன. அத்துடன், இன்னும் பல கோழிகள் உடல்நலம் குன்றிய நிலையில் காணப்படுகின்றன என்று தெரிவிக்கப்பட்டது.

குறித்த கோழிகளையே வாழ்வாதாரமாக நம்பி வாழ்க்கையை நடத்தி வரும் குடும்பமானது இந்த சம்பவத்தால் நிர்க்கதியாகியுள்ளது. இது குறித்து அச்சுவேலி பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ஐ-05)



# நேற்று வரை நாடு முழுவதும் 70 ஆயிரத்து 12 மின் தடைகள்!

கொழும்பு, ஜூன் 02

நேற்று மாலை 05 மணி வரையில் சீரற்ற வானிலை காரணமாக நாடு முழுவதும் மொத்தம் 70 ஆயிரத்து 12 மின் தடைகள் பதிவாகியுள்ளன என்று இலங்கை மின்சார சபை தெரிவித்துள்ளது.

இவற்றில் 41 ஆயிரத்து 684 மின் தடைகள் சீர்செய்யப்பட்டுள்ளன என்று இலங்கை மின்சார சபையின் ஊடகப் பேச்சாளர் பொறியியாளர் தம்மிக விமலரத்ன தெரிவித்தார்.

மீதமுள்ள மின் தடைகளை புனரமைக்க கூடுதல் குழுக்கள் அனுப்பப்பட்டுள்ளன என்றும் அவர் தெரிவித்தார். (ஐ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு
Eelanadu

# அகதிகள், புலம்பெயர்ந்தோர் நாடு திரும்ப தடையில்லை!

## அமைச்சர் ஆனந்த விஜயபால

கொழும்பு, ஜூன் 02

**நாட்டின் குடிவரவு, குடியகல்வு சட்டத்தில் விரைவில் திருத்தம் செய்வதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு அமைச்சரவையில் சமர்ப்பிக்கப்படவுள்ளன என்று பொதுமக்கள் பாதுகாப்பு மற்றும் பாராளுமன்ற அலுவல்கள் அமைச்சர் ஆனந்த விஜயபால தெரிவித்துள்ளார்.**

அசாதாரண சூழல்களில் வெளிநாடுகளுக்கு சென்ற அகதிகள் மற்றும் புலம்பெயர்ந்தவர்கள் மீண்டும் நாடு திரும்புவதற்கு எந்தவிதமான தடைகளும் ஏற்படுத்தப்படவில்லை. பலாலி விமானநிலையத்தில் கைது செய்யப்பட்ட நபரை விடுவிப்பதற்காக குற்றவியல் விசாரணை திணைக்களத்துக்கு உரிய வழிகாட்டல்களை வழங்கியுள்ளதாகவும் அமைச்சர் மேலும் கூறினார்.

இந்தியாவிலுள்ள அகதி முகாமிலிருந்து கடந்த வியாழக்கிழமை நாடு திரும்பிய 75 வயதான நபர் ஒருவர் பலாலி விமான நிலையத்தில் குடிவரவு, குடியகல்வு அதிகாரிகளால் கைதுசெய்யப்பட்டார். நீதிமன்றில் முற்படுத்தப்பட்ட அவர் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

இந்த விடயம் தொடர்பில் அமைச்சரிடம் கேட்டபோதே அவர் மேற்கண்டவாறு கூறினார். மேலும்,

பலாலி விமான நிலையத்தில் குடிவரவு, குடிகல்வு அதிகாரிகளால் நபரொருவர் கைது செய்யப்பட்டுள்ளார். அவர் இலங்கையில் இருந்து வெளியேறும்போது முறைப்படியான சட்டங்களை பின்பற்றியிருக்கவில்லை. அதனைக் காரணம் காண்பித்தே அவர் மீண்டும் நாடு திரும்பும்போது கைது செய்யப்பட்டிருக்கிறார்.

இதனைத் தவிர அவர் கைது செய்யப்படுவதற்கு வேறு காரணங்கள் எதுவுமில்லை. அந்த வகையில் அவரை விடுவிப்பதற்குரிய வழிகாட்டல்களை குற்றவியல் விசாரணை திணைக்களத்துக்கு வழங்கியுள்ளேன். இதேநேரம், இலங்கையின் குடிவரவு, குடியகல்வு சட்டங்களில் காணப்படுகின்ற ஏற்பாடுகளால் தான் இவ்வாறு கைது செய்யப்பட வேண்டிய நிலைமைகள் காணப்படுகின்றன. ஆனால், அகதிகளாக சென்றவர்களோ, புலம்பெயர்ந்தவர்களோ மீண்டும் நாடு திரும்பும் போது அவர்களைக் கைதுசெய்வது எமது அரசாங்கத்தின் கொள்கை அல்ல. அந்த வகையில், நாட்டில் அசாதாரண சூழல் காணப்பட்டபோது அக்காலத்தில் ஏதோவொரு வகையில் வெளியேறியவர்கள் மீண்டும் நாடு திரும்பும்போது நெருக்கடிகளுக்கு முகங்கொடுக்காத வகையில் சட்டத்தில் திருத்தத்தைச் செய்ய வேண்டியுள்ளது.

அதற்கான அமைச்சரவை பத்திரத்தை விரைவில் சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்படவுள்ளன. அத்துடன் புலம்பெயர்ந்துள்ளவர்கள், அகதிகளாக வேறு நாடுகளில் தங்கியுள்ளவர்கள் எந்தவிதமான அச்சங்களுமின்றி நாடு திரும்ப முடியும். அவர்கள் தங்களது நிலங்களில் வாழுவதற்கான உரித்துகளைக் கொண்டிருக்கிறார்கள். அவர்களை நாம் ஆட்சியை பொறுப்பெடுத்த காலத்திலிருந்து பகிரங்கமாகவே அழைப்பு விடுத்து வருகிறோம் என்பதை இந்தச் சந்தர்ப்பத்தில் மீள நினைவுபடுத்திக் கொள்கிறேன் - என்றார். (ஐ)

## அல்வாய் படுகொலையின் 38ஆவது நினைவேந்தல்!



வடமராட்சி, ஜூன் 02


அல்வாய் படுகொலையின் 38ஆவது ஆண்டு நினைவேந்தல் நேற்று ஞாயிற்றுக்கிழமை நெல்லியடி - மாலை சந்தை மைக்கல் விளையாட்டு மைதானத்தில் நடை பெற்றது.

மைக்கல் விளையாட்டு கழகம், மைக்கல் நேசக்கரம் இணைந்து ஏற்பாடு செய்த இந்த நினைவேந்தல் நிகழ்வில், தமிழ்த் தேசிய கட்சியின் செயலாளர் நாயகம் எம். கே. சிவாஜிலிங்கம் ஈகைச்சுடரை ஏற்றி மலர் தூவி அஞ்சலி நிகழ்வை தொடக்கி வைத்தார்.

இந்மநிகழ்வில் முன்னாள் மாகாண சபை உறுப்பினர் எஸ். சுகிர்தன், தமிழ்த் தேசிய ஆதரவாளர்கள், அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகள், பொது மக்கள் எனப் பலர் பங்கேற்றிருந்தனர்.

1987ஆம் ஆண்டு முன்னெடுக்கப்பட்ட 'ஒப்ரேசன் லிபரேசன்' இராணுவ நடவடிக்கையால் வடமராட்சி மக்கள் இடம்பெயர்ந்தனர். இவ்வாறு இடம்பெயர்ந்தவர்கள் அல்வாய் முத்துமாரி அம்மன் ஆலயத்தில் தங்கியிருந்தபோது, மே 29ஆம் திகதி இராணுவம் நடத்திய எறிகணை தாக்குதலில் நூற்றுக்கும் மேற்பட்டவர்கள் அந்த இடத்திலேயே உயிரிழந்தனர். தவிர, இந்த நடவடிக்கையின் போது இராணுவத்தினரால் ஏராளமான பொதுமக்கள் கொல்லப்பட்டனர் என்பதும் குறிப்பிடத்தக்கது. (ஐ-02)

## கிளிநொச்சி சபைகளின் உறுப்பினர்கள் பிரமாணம்!



கிளிநொச்சி, ஜூன் 02

கிளிநொச்சி மாவட்டத்தின் உள்ளூராட்சி சபைகளான கரைச்சி, பூநகரி, பச்சிலைப்பள்ளி ஆகியவற்றுக்கு தெரிவான இலங்கை தமிழ் அரசுக் கட்சியின் உறுப்பினர்கள் நேற்று சத்தியப்பிரமாணம் செய்து கொண்டனர்.

பாராளுமன்ற உறுப்பினரும், கட்சியின் கிளிநொச்சி மாவட்ட கிளைத் தலைவருமான சிவஞானம் சிறீதரனின் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில், வடக்கு மாகாண முன்னாள் கல்வி அமைச்சர் தம்பிராஜா குருகுல ராஜா, கிளிநொச்சி மாவட்ட பிரஜைகள் குழுவின் தலைவரும் ஓய்வுநிலை பிரதி கல்வி பணிப்பாளருமான கிருஷ்ணபிள்ளை சின்னராஜா, ஓய்வுநிலை அதிபரும் தமிழ் அரசு கட்சியின் மூத்த உறுப்பினருமான நாகலிங்கம் சோதிநாதன் ஆகியோர் முன்னிலையில் இவர்கள் சத்தியப்பிரமாணம் செய்து கொண்டனர். (ஐ)

## 14 வயது சிறுமி கர்ப்பம்; சந்தேகநபர் கைது

கொழும்பு, ஜூன் 02

14 வயது சிறுமியை கர்ப்பமாக்கிய குற்றச்சாட்டில் சந்தேகநபர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

பதுளை - அப்புத்தளையில் சிறுமி ஒருவர் வயிற்று வலிக்காக தியத்தலாவை மருத்துவமனையில் நேற்று முன்தினம் இரவு சேர்க்கப்பட்டார்.

சிறுமியை பரிசோதித்த மருத்துவர்கள் அவர் கர்ப்பமாக இருக்கிறார் என்று கூறியுள்ளனர். அத்துடன், இது குறித்து பொலிஸ் நிலையத்திலும் முறைப்பாடு செய்யப்பட்டது. பண்டாரவளை பொலிஸாருக்கு சிறுமி அளித்த வாக்குமூலத்தின் அடிப்படையில் சந்தேகநபர் கைதுசெய்யப்பட்டுள்ளார். (ஐ)

## கிளிநொச்சி மருத்துவமனையின் கிணற்றின் நீரில் மலத்தொற்று!

கிளிநொச்சி, ஜூன் 02

கிளிநொச்சி மாவட்ட மருத்துவமனையின் கிணற்று நீரில் மலத்தொற்று (ஈகோலி) இருப்பது ஆய்வில் கண்டயறிப்பட்டது. இதையடுத்து, தொற்று நீக்கும் நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டு வருகிறது என்று தெரிவிக்கப்பட்டது.

மருத்துவமனை வளாகத்திலுள்ள கிணற்றின் நீரே அனைத்துத் தேவைகளுக்கும் பயன்படுத்தப்பட்டு வருகிறது. இதையடுத்து, மலத்தொற்றை நீக்கும் நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டுள்ளது.

எனினும், கிளிநொச்சி மாவட்டத்தில் பல கிணறுகளில் மலத்தொற்று பிரச்னை உள்ளது. எனவே, பொது மக்கள் கிணற்று நீரில் குளோறின் இட்டு தொற்று நீக்கம் செய்ய வேண்டும். அல்லது தண்ணீரை நன்கு கொதிக்க வைத்த பின்னர் அருந்த வேண்டும் என்று அறிவுறுத்தப்பட்டுள்ளது. (ஐ)

## மருந்துகள் ஏற்றுமதிக்கு அரசாங்கம் ஆதரவளிக்கும்

### சுகாதார துறை அமைச்சர்

கொழும்பு, ஜூன் 02

செலோஜன் லங்கா நிறுவனம் தயாரித்த மருந்துகள் பெரு நாட்டுக்கு ஏற்றுமதி செய்யப்பட்டுள்ளன. அரசாங்கம் என்ற வகையில், நாட்டில் உள்ளூர் மருந்து உற்பத்தியாளர்களை ஊக்குவித்து, மருந்துத் துறையின் வளர்ச்சிக்கு அதிகபட்ச ஆதரவை தொடர்ந்து வழங்கும் என்று சுகாதார மற்றும் வெகுஜன ஊடக அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்துள்ளார்.

குறித்த நிறுவனத்தின் மருந்துகளை ஏற்றுமதி செய்யும் நிகழ்வில் பங்கேற்று உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அத்துடன், இதய நோயாளிகளுக்கு பயன்படுத்தப்படும் இந்த மருந்துகளின் தொகுதியை பெரு நாட்டுக்கு ஏற்றுமதி செய்ய செலோஜென் லங்கா நிறுவனம் திட்டமிட்டுள்ளது. இந்த மருந்துகளின் மதிப்பு 4.5 கோடி ரூபாய். இலவச சுகாதார சேவையில் பயன்படுத்துவதற்காக உயர்தர மருந்துகளை தொடர்ந்து உற்பத்தி செய்து, சுகாதார அமைச்சகத்திற்கும் வெளிநாடுகளுக்கும் வழங்கவும், தனியார் மருந்தகங்களிலிருந்து மருந்துகளை வாங்கும் இந்நாட்டு மக்களுக்கு நியாயமான விலையில் உயர்தர மருந்துகளை வழங்கவும் மருந்து உற்பத்தி நிறுவனங்களுக்கு சுகாதார மற்றும் வெகுஜன ஊடக அமைச்சர் விசேட கோரிக்கை விடுத்தார். (ஐ)

## மழையுடனான வானிலை இன்றுமுதல் குறைவடையும்

கொழும்பு, ஜூன் 02

இன்று திங்கட்கிழமை முதல் மழையுடனான வானிலை குறைவடையும் சாத்தியமுள்ளது என்று வளிமண்டலவியல் திணைக்களம் எதிர்வுகூறியுள்ளது.

மேல், சப்ரகமுவ, மத்திய மற்றும் வடமேல் மாகாணங்களிலும் காலி, மாத்தறை மாவட்டங்களிலும் தொடர்ந்தும் இடியுடன் கூடிய மழை பெய்யக்கூடும் என்றும் அந்தத் திணைக்களம் கூறியுள்ளது.

எனினும், கடலுக்கு செல்வதை தவிர்க்குமாறு கடல்சார் ஊழியர்களுக்கும் மீனவர்களுக்கும் தொடர்ந்தும் அறிவுறுத்தல் விடுக்கப்பட்டுள்ளது. (ஐ)

## பேருந்து கட்டண திருத்தம் ஓகஸ்ட் வரை ஒத்திவைப்பு

### தனியார் பேருந்து உரிமையாளர் சங்கம்



கொழும்பு, ஜூன் 02

ஜூலை மாதத்தில் வழக்கமாக நடைமுறைக்கு வரும் வருடாந்த பேருந்து கட்டண திருத்தத்தை ஓகஸ்ட் வரை ஒத்திவைக்க முடிவு செய்துள்ளதாக தனியார் பேருந்து உரிமையாளர்கள் சங்கம் நேற்று அறிவித்தது.

நாட்டின் தற்போதைய சூழ்நிலையை கருத்தில் கொண்டு இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளதாக தனியார் பேருந்து உரிமையாளர்கள் சங்கத்தின் தலைவர் கெமுனு விஜேரத்ன தெரிவித்தார்.

"பேருந்து கட்டண திருத்தம் வரவிருந்தாலும் ஓகஸ்ட் வரை தற்போதுள்ள கட்டணங்களைத் தொடர நாங்கள் முடிவு செய்துள்ளோம்," என்று அவர் கூறினார்.

அத்துடன், வருடாந்த கட்டண திருத்தம் வழக்கமாக ஒவ்வொரு ஜூலை மாதமும் நடைமுறைக்கு வரும். ஆனால், தொடர்புடைய அதிகாரிகளுடன் கலந்தாலோசித்த பிறகு அதை தாமதப்படுத்த சங்கத்துக்கு விருப்புரிமை உள்ளது என்று விஜயரத்ன கூறினார். "ஒரு சங்கமாக, பொறுப்பான அமைச்சர்களுடன் கலந்துரையாடியதைத் தொடர்ந்து, கட்டண திருத்தங்களை நாங்கள் முன்னர் ஒத்திவைத்துள்ளோம்," என்றும் அவர் மேலும் கூறினார். (ஐ)

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 02.06.2025 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org